# மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,

4

பொங்கல் இதழ்

# மன்றம்

[வ]ா[ல]ர் 3] 15 - 1 - 55 [இதழ் 18


## பொங்கல் வாழ்த்து !

காலை விழித்தது! கதிர்கோமான் எழுந்[த]ான்!

[சே]ாழி கூவியது! சிறு பறவைகள் கூவின! [கா]லை முரசங் கேட்டுத் திக்குகள் ஆர்ந்தன! இருள் விலகியது, பனி கலைந்தது! குளிர் [அட]ங்கியது, வாடை அகன்றது!

உருக்கிய தங்கக்குழம்பு கீழ்வானில் பாய்ந்[த]ோடியது! அதை வழித்தெடுத்து மேகக் [கூ]ட்டங்கள் ஓவியந் தீட்டின!

விண்ணும், மண்ணும், கடற்பரப்பும், ஒளிப் [பு]னலும், காடும் கழனியும், மலையும் சரிவும், சாலையும் சாலையும், கதிர்ச்செல்வன் வச[ம]ாயின!

வழியை மறித்து நின்ற மலைமுடி சிவந்தது, [கோ]பத்தால்! மடுவில் நின்ற தாமரையாளின் [ம]லர்க்கன்னம் சிவந்தது, நாணத்தால்! சாலையில் கொவ்வைப் பழம் சிவந்தது, கனி[வ]ால்! கூரையில் நின்றிடும் சாவலின் [கொ]ண்டை சிவந்தது, களிப்பால்!

அருவி ஆர்த்தது! அதுகேட்டு மலைச்சரிவு [ப]சும்புல் கம்பளத்தை விரித்தது! அதில் [ப]னி முத்துக்கள் உருண்டோடின!

ஓடையில் அன்னம் மலர்ப்பொழிலிடை [உ]லவிவரும்! அல்லி மலர்ப்பாவை உறங்கிவிடு[வ]ாள்! தாமரையிலைகளில் நீர்முத்துகள் விளை[ய]ாடிடும்!

மலர்ச்சோலைகளில், "காலை வந்தது, கண் [வி]ழிப்பீர் எல்லீரும்!" என்று குயில் கூவிட, [கா]லைப் பண்பாடி வண்டுகள் எழுப்பிட, மெய் [ம]லிர்த்து தோகை விரித்து மயில்கள் ஆடிட, தென்றல் அசைத்துச்செல்ல, தேன்மலர்கள் அப்பொழுதுதான் கண்மலர்ந்து நோக்கும், காலைப்பொழுதை!

அதோ! வயலில்! கதிர்கள் சாய்ந்துகிடக்கின்றன. இன்று பொன்விளையும் நிலமோ என்று காண்போர் மயங்குமாறு செந்நெல் விளைந்து தாழ்ந்து கிடக்கிறது. மண் வளமானது; வந்து பாயும் ஆறு, வானம் மறந்தாலும் தான் மறவாது புதுப்புனலைக் கொண்டு வந்து சேர்க்கும் தன்மையுடையது. அந்த வயலில் உழைத்திடும் உழவனே—களத்தில் நின்றுகொண்டிருக்கும் அவன்தான், நன்ருகப் பாருங்கள்! உழைப்பிலே வளர்ந்த—உழைப்புக்குப் பின்வாங்காத கட்டுடல், களத்தில் குவிந்துகிடக்கும் நெல்மணிகளை அவன் பார்க்கிருன். உழைப்பு, உழைப்பு, சலியாத உழைப்பு! அதன் பலன் எதிரே குவிந்து கிடக்கிறது. பட்ட பாடு எவ்வளவு! இப் பலன் காணக் காத்துக்கிடந்த நாட்கள் எத்துணை! திருந்தாத கரம்பைத் திருத்திக் கழனியாக்கி, அதற்கு எருவிட்டு ஏர்தொட்டு, நீர் பாய்ச்சி, பரம்படித்து, விதை தூவி, நாற்று நட்டு, களையெடுத்து, பருவம் நோக்கி, வேண்டுங்காலத்து நீர்விட்டு, மிகுதிப்பட்டபொழுது நீர்வடித்து, காலமெல்லாம் அவன் பாடுபட்டதன் பலன் செந்நெல் மணிகளாகக் குவிந்துள்ளன! அந்தமணிகளை எடுத்துப் பார்த்தால், அவன் கொடுத்த உழைப்பு, சிந்திய வியர்வை, தெரியவரும். அவன் மட்டுமல்ல, அவன் குடும்பமே அந்த விளைவைக் காண பாடுபட்டிருக்கிறது. ஏர் பிடிக்க, அவன் அண்ணன் தம்பியர் துணை வந்திருக்கின்றனர். ஆறுமாதக் குழந்தையை ஆலமரத்தடியில் உறங்கவைத்துவிட்டு, வயலில் இறங்கி வேலை செய்திருக்கிருள் அவன் அருமை மனைவி. நாற்று நட்டதும், களையெடுத்ததும், பின் கணவன் சோர்வடைந்த பொழுதெல்லாம் ஊக்கமளித்ததும் அவளே! கதிர் முற்றிக், களத்தில் குவிக்கும் நேரத்திலும் அவள் பங்கு கொள்ளுகிருள்! கைகளில் பெரிய கதிர்க்கட்டையும், நெஞ்சிலே மகிழ்ச்சியையும் சுமந்து அவள் வருகிருள்! அவள் முகத்தில் ஒளிவிடும் களிப்பு, உழவனின் கவலைகளை மாற்றிவிடுகிறது. உழைப்பின் பயன் இதுவே என அவன் உவகைகொள்ளும்பொழுது, அவனது உவகையை எதிரொலிப்பதுபோன்று, "பொங்கலோ, பொங்கல்!" என்று ஆடிப்பாடி சிறுவர் சிறுமியர் வருகின்றனர்.


[உ]ள்நாடு அணு 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணு 5

பொங்கல் திருநாள்! புத்தாண்டின் முதல் நாள்! உழவர்தம் விழாநாள்! தமிழகத்தின் தனிப்பெரும் நன்னாள்! நொந்த வாழ்வினராக இருந்தாலும் ஒரு நாளேனும் சங்கடங்களை மறந்து விழாக்கொண்டு, ஆடிப்பாடி பல்வேறு வேடிக்கைகளில் உழவர் பெருங்குடியினர் ஈடுபடும் நாள்! கையிலும் காலிலும் என்றென்றும் சேறு, ஒருநாளேனும் மார்பிலே சந்தனம் மணக்க இருப்போம்; கந்தலாடையை நீக்கி, இன்று புத்தாடையை உடுத்துவோம் என்று உழவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் விழாக்கோலம் கொள்ளும் நாள்! மக்கள் மட்டுமல்ல, மாடு கன்றுகள்கூட விழாக் கோலம் கொள்ளும் நாள்!

ஆண்டுதோறும் பொங்கல் திருநாள் தமிழகமெங்கும் சீரும் சிறப்பும் மிகுந்திடக் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் பலப்பல பண்டிகைகள்,—பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தால் ஆண்டுமுழுவதும் வந்தபடி இருக்கின்றன. சூரனைச் சுப்பிரமணியர் கொன்ற நாள், காமனைக் கைலைவாசன் வென்ற நாள், தனயனைத் தாய் கொன்ற நாள், தாருகனைக் காளி கொன்ற நாள் என்று கொலை நாட்கள், தமிழரின் பண்புக்கும் கருத்துக்கும் ஒவ்வாத கற்பனைச் சம்பவங்கள் தமிழ் நாட்டில் கொண்டாடப்படுகின்றன. ஆனால் அந்தக் "கொலை நாட்கள்" உண்மையில் தமிழர் பண்பாட்டை-கருத்துக்களை — இலக்கியத்தை — வாழ்வை கொலை செய்யும் நாட்களாக இருந்தன. அந்தக் "கொலை" விழாக்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாய், தமிழரின் தனிப்பெரும் கலைவிழாவாகப் பொங்கல் இருக்கிறது. சூதுத் திட்டங்களுக்கு, மாயாவாதங்களுக்கு, சுயநலப் போக்குக்கு ஆக்கமளிக்கும் விதத்தில் மாற்றார் பண்டிகைகள் இருக்க, தமிழர் விழா உழவுக்கும் தொழிலுக்கும் பெருமை அளித்து, நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியையும் எழுச்சியையும் தருவதன்றி, வேறு "கொலை" விழாவாகவோ, எளியோரை மாட்டிடும் "வலை" விழாவாகவோ அமையவில்லை. எனவே எல்லோரும், பொங்கல் விழாவைப் போற்றிக் கொண்டாடுகின்றனர்.

பொங்கல் விழாவில் முதன்மை பெருபவர்கள் உழவர்கள். அவர்தம் நிலையை நாம் மறந்துவிடவில்லை. பால் பொங்கி, பகுத்துண்டு மனமகிழவேண்டிய நன்னாளில் கண்ணீர் பொங்கிட மண்ணில் புரண்டு புலம்பிடும் மக்கள் நமது தேய்ந்த நாட்டில் ஏராளம்.

திருந்திய வயல்கள்—நாட்டில் திருந்தாத வயல்கள் ஏராளமாக உள்ளன. உழவுக்குக் கொண்டுவரப்படாத நிலங்கள், உழைத்தும் சரியான பலன் தராத முறை—நமது நாட்டின் உழவர்களை ஏழ்மையெனும் பள்ளத்தில் தள்ளிக் கொடுமையெனும் கோல்கொண்டு ஆட்டிவருகிறது. அடிமைப்பட்ட நாடு—அரசியல், சமுதாயம், பொருளாதாரம், இவைகளில் அடிமைப்பட்ட நாடு—அதன்விளைவாக ஏழ்மை, பஞ்சம், பட்டினி, வேதனை, சோகம் இந்த நிலை நிச்சயமாக மாறியாகவேண்டும். உழவர் முதல் உழைப்போர் அனைவரும், நாட்டு வளங்களைப் பெற்று, வாழ்க்கை வசதிகளைப்பெற்று, தன்மானத்தினராய், தன்னுரிமைபெற்றவர்களாய் வாழ்ந்திட, நமது நாடு நம்முடையதாகவேண்டும், இன்பத் திராவிடம் மலரவேண்டும். அந்த இலட்சியத்தை அடைந்திட, இன்பவாழ்வை அமைத்திட, பொங்கல் நன்னாள், புத்தாண்டின் முதல் நாள் நமக்கு புதிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதாக!

பொங்கல் நன்னாளில், புத்தாண்டின் தொடக்கத்தில் அனைவருக்கும் நமது வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நமது இயக்கத் தோழர்களுக்கு, இலட்சிய வீரர்களுக்கு, நமது குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த, பாசமும் நேசமும் கலந்த பாகுமொழிகளை வழங்குகிறோம்! அன்பால் நம்மையெல்லாம் ஒன்று சேர்த்து, கண்ணியமும் கட்டுப்பாடும் குறையாத வகையில் நம்மை பாதுகாத்துவரும் நமது குடும்பத்தின் முதல்வர் — அறிஞர் அண்ணா அவர்களுக்கு நமது வணக்கமும் வாழ்த்துதலும் உரியதாகுக! இந்த மகிழ்ச்சி நாளில், அனைவருக்கும்—மாற்றுக் கட்சியினருக்கும், தம்மை மாற்றார் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள் அனைவருக்கும் நமது வாழ்த்துகள்!

**"பொங்கலோ, பொங்கல்! பொங்குக இன்பம், தங்குக எங்கும்!**

**வாழ்க திங்கள், வாழ்க செங்கதிர், வாழ்க வாழ்க வளமார் எமது திராவிடம்!**

# பண்டை விழாக்கள்

பரணன்

ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு டிப்பாடிக், கூடிக்குலாவி, வேடிக்கைப் ர்த்து விளையாடியிருந்து, இனியன உண்டு ரியன கண்டு, வேண்டுவன வாங்கி விரும் பன செய்து மகிழ்ச்சியிற் திளைத்திருக்கும் கழ்ச்சியைத்தான் விழவு எடுத்தல் அல்லது ழாக் கொண்டாடுதல் என்று கூறுகிறோம். ழாக் கொண்டாடும் மக்கள் மகிழ்ச்சிக்குரிய ழ்நிலைகளை உண்டாக்கிக்கொள்வதில் க்க முயற்சி எடுத்துக்கொள்வார்கள். ழாவில் கலந்துகொள்ளுவோர் தம்மை டை அணிகலன்களால் அழகுபடுத்திக் காண்டு, மலர் சாந்தம் முதலிய நறுமணங் கமழ, கவர்ச்சிகரமான தோற்றத்துடன் றப்படுவர். மக்கள் பெருங்கூட்டமாகக்கூடி கிழ்ச்சியுறுவதற்கு விழா ஒரு பெரும் வாய்ப் கும்.

மக்கள் திரளாகத் திரண்டு விழாக் கொண் டுதல் என்பது காட்டுமிராண்டிக்காலத்தி ருந்து இற்றைக்காலம் வரையில், எல்லா டுகளிலும் உள்ள, எல்லாவித மக்களிடத்தி ம் காணப்பட்டுவரும் பழக்கமாகும். பண் டக் காலத் தமிழ் மக்கள், நாகரிகத்தில் மிக ர்ந்து விளங்கியதால், நாகரிகத்திற்கேற்ற ழாக்கள் பலவற்றையும் கொண்டாடியிருந் ருக்கின்றனர்.

நாடு முழுவதும் சேர்ந்து கொண்டாடும் ழாக்கள் என்றும், ஊர்மட்டுமே கொண்டா விழாக்கள் என்றும், குறிப்பிட்ட பிரிவினர் டும் கொண்டாடும் விழாக்கள் என்றும், றிப்பிட்ட தொழிற்துறையினர் கொண்டா விழாக்கள் என்றும், குடும்பத்தினர் மட் கொண்டாடும் விழாக்கள் என்றும், விழாக் பல்வேறுவகைப்பட்டனவாகப் பண்டைக் லத்திலும் கொண்டாடப்பட்டிருக்கின்றன.

ஊர்மக்கள் முழுவதும் சேர்ந்து கொண்டா விழாவாக இருந்தால், மக்கள் ஊரைப் பல்வேறு வகைகளிலும் அழகுபடுத்திக் கவர்ச்சிகரமாக ஆக்கிவைப்பார்கள் என்பது, "**சாறுகொண்ட களம்போல, வேறுவேறு பொலிவு தோன்ற்**" (புறம்-22—விழா எடுத்துக்கொள்ளப் பட்ட இடம்போல வேறுவேருக அழகு தோன்ற) என்ற அடிகளால் நன்கு அறிந்து கொள்ளலாம். ஊரிலே பொதுமக்கள் எல் லோரும் சேர்ந்து கொண்டாடும் விழாவைப் பண்டைத் தமிழர்கள் **சாறு** என்று அழைத்திருக்கின்றனர்.

அடிக்கடி விழா நடப்பதையே ஊர்மக்கள் பெரிதும் விரும்பியிருந்திருக்கின்றனர். ஊரில் விழா நடைபெருமல் எக்காரணத்திஞல் நின்றுபோக நேரிட்டால் அதனைப் பொலி வழிந்தவொரு நிலையாகவே கொண்டிருந் திருக்கின்றனர். ஊரானது பொலிவந்த நிலையி லிருப்பதை உணர்த்த வந்த புறநானூற்று ஆசிரியர் ஒருவர் "**விழவும், அகலு ளாங்கட் சீறூர் மறப்ப**" (புறம்-65—அகன்ற தெருவினையுடைய சீறூர் விழாவினையொழிய) என்று குறிப்பிடு கிருர்.

ஏதேனும் ஒவ்வொரு விழா எப்பொழுதும் ஒன்றுமாற்றி மற்ருென்று தொடர்ந்து நடை பெற்றுக்கொண்டிருத்தலையே பண்டைத் தமிழ்மக்கள் வாழ்க்கைக்கு மகிழ்ச்சியூட்டும் செயலாகக் கொண்டிருந்திருக்கின்றனர். விழாக்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன என்ருல், நாட்டில் நல்ல வரு வாய் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது என்பது பொருளாகும். இந்த நிலைமைகள் பண்டைத் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் நின்று நிலவியிருந்திருக்கின்றன என்பது "**மடியா விழவின், யாணர் நன்னுட் டுள்ளும்**" (புறம் 212—நீங்காத விழாவினையுடைய புதுவருவா யுள்ளதாகிய நல்ல சோழநாட்டுள்ளும்) என்ற அடிகளாலும், "**விழவுடை நாட்டென**" (புறம்-381 —விழாவையுடைய நாட்டிற்கு என்று

சொல்ல) என்ற அடியாலும் இனிது புலப் படும்.

**"சாறுதலைக் கொண்டென"** (புறம்-82—ஊரின் கண் விழா தொடங்கிற்றாக) என்று தொடங் கும் புறநானூற்றுச் செய்யுளில் சக்கிலியன் ஒருவன் ஊரின்கண்ணே தொடங்கும் விழா வில் கலந்துகொள்ள எவ்வளவு துடிதுடிக் கிறான், விரைவுகொள்கிறான் என்ற செய்தி உணர்த்தப்படுகிறது. ஊரின்கண்ணே விழா தொடங்குவதை மக்கள் பெருமகிழ்ச்சியோடு வரவேற்று அதில் பங்குகொள்ள பேராவல் உற்றிருந்தனர் என்பதை அறிகிறோம்.

**"கல்லென், விழவுடை யாங்கண்"** (புறம்-31—கல்லென்னும் ஓசை உண்டான விழாவினை யுடைய அவ்விடத்து) என்பதாலும், **"கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்"** (புறம்-84—கல்லென் னும் ஒலியையுடைய பெரிய ஊரின்கண் விழா வினையுடைய இடத்து) என்பதாலும் விழாக் களில் கூடும் மக்கள் எழுப்பும் ஒலி கல்லென்று பேரொலியாக ஒலித்ததையும், மக்கள் அந்த அளவுக்குப் பெருந்திரளாகக் கூடியதையும் எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

விழாக் காலங்களில் இறைச்சியும், சோறும் கலந்த உணவினைப் பெருவாரியாக ஆக்கி உண்டு மகிழ்வார்கள் என்ற செய்தியினை **"மாடந் தொறு மைவிடை வீழ்ப்ப, நீயாங்குக் கொண்ட விழவினும்"** (புறம்-33—மாடந்தோறும் செம்மறி யாட்டுக்கிடாயை வெட்டி உணவாக்க, நீ அவ் விடத்து எடுத்துக்கொண்ட விழாக்களைக் காட்டிலும்) என்ற அடிகளும், **"விழவின் றாயினும் படுபதம் பிழையாது மையூன் மொசித்த வொக்கலொடு"** (புறம்-96—விழாவில்லையாயினும், உண்டாக் கப்படும் உணவு யாவர்க்கும் தப்பாமற் செம் மறியாட்டுத் தசையைத் தின்ற சுற்றத் துடனே) என்ற அடிகளும் அறிவிக்கக்காண லாம்.

இப்படியாகப் பண்டைத் தமிழ்மக்கள் விழாக் கள் கொண்டாடிய வகைகளைப் புறநானூறு மட்டுமல்லாமல் பிற சங்க இலக்கிய நூல்களும் சிறுசிறு குறிப்புகளால் உணர்த்துகின்றன. ஒவ்வொரு விழாவும் மக்கள் கூடுவதற்கு ஏற்ற வொரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்திருக்கிறது.

காட்டுமிராண்டிக்காலத்திலிருந்து அறியா மையால் கற்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு, நாகரிக மடைந்த காலத்திலும் நம்பிக்கைக் குள்ளாக்கப்பட்ட கடவுளர்க்கு விழாவெடுத் தல், பண்டைத்தமிழகத்தில், ஆங்காங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கடவுளர் பொருட்டுக் கொண்டாடும் விழாக்களை **திருவிழா** என்று அழைத்தனர். மருத நில திற்குரியவனாகக் கொள்ளப்பட்ட இந்திரன் என்ற கடவுளுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் பெருவிழா கொண்டாடப்பட்ட செய்தியை சிலப்பதிகாரம் இனிது கூறுகிறது. இந் இந்திரன் என்ற கடவுள் வடவாரியர் கூறு இந்திரன் என்ற கடவுளினின்றும் வேறுப டவராவார் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறு கிறார்கள்.

**கடலாடுவிழா** என்பது, பண்டை நாட்களில் கடற்கரை ஓரங்களில் அமைந்துள்ள பட்டின களில் வாழ்ந்த மக்களால் கொண்டாடப்ப டிருக்கிறது. குறிப்பிட்ட நாளில் காதலரு காதலியரும், ஆடவரும் பெண்டிரும், இள யோரும் முதியோரும், அரசரும் பிறரும் ஆடி பாடிச் சென்று கடலிலே நீராடி மகிழ்ந்திரு கின்றனர்.

அரசன் முடிசூட்டிக்கொள்ளுவதைப் பெரு விழாவாக கொண்டாடினர். அந்த விழாவிற்கு **மண்ணுமங்கலம்** என்று பெயர். மன்னன் முடி சூட்டிக்கொண்ட நாளில் ஆண்டுதோறு இவ்விழாகொண்டாடப்பட்டது. வேற்றுநா களை வென்று அவற்றிற்கு அரசனாக முடி சூட்டிக்கொள்ளும்போது அந்தந்த நாடுகளில் மண்ணுமங்கல விழா நடைபெற்றது.

நாடாளும் அரசனது பிறந்தநாள் விழ ஆண்டுதோறும் மக்களாலும், அரசனாலு கொண்டாடப் பட்டது. அரசன் குடிகளிடத் அருளுள்ளம் படைத்தவன் என்பதற்கறிகுறி யாகப் பிறந்தநாளன்று வெள்ளுடை உடுத்திச் சிறைப்பட்டவரை விடுதலை செய்து, கொலை யையும் போரையும் நிறுத்தி, வரி தள்ளுபடி செய்தலும், ஈகையளித்தலும் ஆன பல்வேறு செயல்களைச் செய்வான். இந்த விழாவினை **பெருமங்கலம்** என்று அழைத்தனர்.

அரசர்கள் போரில் வெற்றிபெறும்போது **வெற்றிவிழா** கொண்டாடினர். தமது நகரிலா வது, அல்லது மாற்றூர் நகரிலாவது அல்லது இரண்டு இடத்திலுமாவது வெற்றிவிழாவைக் கொண்டாடுவது வழக்கம். வெற்றிவிழாவின் போது அரசன் மாற்றூர் நாட்டில் பற்றி கொண்ட பொருள்களை யெல்லாம் பாணர்க் கும் பரிசிலர்க்கும் வழங்குவான்.

அரசனுக்குப் பிள்ளை பிறக்கும்போது கொண்டாடப்படும் விழா **மகப்பேற்றுவிழா** என்று கூறப்படும். இதனை அரசனோடு சேர்ந்து மக்களும் கொண்டாடினர். பிறக்கும் குழந்தை

ஆணாக இருந்தால் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்; அதுவும் பட்டத்திற்குரிய முதல் ஆண் குழந்தையாக இருக்குமேயானால் விழா மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

போர்க்களத்தில் வீரர்கள் பகைவரின் வாளுக்கு இரையாகி வீழ்ந்துபட்டால், அவர்களைப் புதைத்து, அவர்கள் கல்லறைமீது அவர்களுடைய பெயரும், பெருமையும் எழுதப்பட்ட கற்களை நட்டார்கள். அத்தகைய கல் நடும் விழா **நடுகல்விழா** என்று அழைக்கப்பட்டது. அரசரும் வீரர்களும், பொதுமக்களும் இந்த விழாவில் கலந்துகொண்டு இறந்த வீரர்களுக்குத் தக்க முறையில் வீரவணக்கம் செய்வர். இப்படி நடப்பட்ட நடுகற்கள்தாம் பிற்காலத்தில் சிறு கடவுளர்களாக மக்களால் வணங்கப்பட்டன. முனியாண்டி, சங்கிலிக் கருப்பன், மதுரைவீரன் போன்ற நடுகல் வீரர்கள்தாம் இப்பொழுது சிறுகடவுளர்களாக மாறியுள்ளனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். கற்புடைய மறக்குடிமகளிரின் கணவன்மார்கள் போர்க்களத்தில் இறந்துபட்டால், அப்பெண்கள் மாற்றார் கையில் சிக்குண்டு சீரழியாமல் இருக்கவேண்டி தீ வளர்த்து அதில் பாய்ந்து மாய்த்துக்கொள்வதுண்டு. அப்படிப்பட்ட வீரப்பெண்மணிகளுக்குச் சிலை நாட்டுவது விழாவாகக் கொண்டாடப்பட்டது. அந்த விழாவுக்குப் **பத்தினிவிழா** என்று பெயர். தீ பாய்ந்த அம்மன் கோயில்கள்தாம் நாளடைவில் திரௌபதி அம்மன் கோயில்களாக மாறின என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

**ஏறு தழுவும் விழா** என்பது நாடெங்கணும் பண்டுதொட்டு இருந்துவரும் விழாவாகும். பாயும் முரட்டு எருதுகளை அவிழ்த்து விட்டுவிட்டு, அவற்றை அடக்கித் தம் ஆதிக்கத்தின்கீழ் யார் கொண்டுவருகிறார்களோ, அவர்கள், வீரர்களாக எண்ணப்பட்டதோடு மதிப்பிற்குரியவராகவும் ஆயினர். எருதினை அடக்கி வெற்றிபெற்ற ஆடவர்களை மணந்துகொள்வதிலே அக்காலப் பெண்கள் தனிவிருப்பமும், பெருமிதமும் காட்டிவந்தனர். அந்த விழா இப்பொழுதும் நடைமுறையில் இருந்துவருவதைக் காணலாம்.

நாடெங்கணும், குறிப்பிட்ட ஒரே நாளில், குடும்பங்கள் தனித்தனியாகக் கொண்டாடும் விழாக்கள் பல உண்டு. அவற்றில், பண்டை நாட்களில் மிகச்சிறந்து விளங்கியவிழா **பொங்கல் விழா** ஆகும், புதிதாக அறுவடை செய்து கொண்டுவந்த மணிகளைப், பாலில் போட்டு, உலை ஏற்றிப், பொங்கலாகச் சமைத்து அதனை உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும். இது தை முதல் நாளில் தொன்று தொட்டுக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**விளக்குவரிசைவிழா** என்பது வீடுகளில் விளக்குகளை வரிசையாக அழகுபட ஏற்றிவைத்துக் களிப்பது. நல்ல இருட்காலமான கார்த்திகைத் திங்களில், விளக்குகளை வரிசையாக ஏற்றி வைப்பது தனி அழகைக் கொடுப்பதாகும். இது தமிழகத்தில் இயற்கையோடு ஒன்றி வளர்ந்த ஒரு விழாவாகும்.

ஆறுகளில் வெள்ளம் பெருகும்போது அதனை மகிழ்ச்சியோடு வரவேற்று ஆற்று நீராடுவது அக்காலத்திலிருந்துவரும் பழக்கமாகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மிகவான மழை பெய்து ஏறத்தாழ ஆடித் திங்கள் இடைப்பகுதியில் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவது இயல்பாதலின், ஆடித் திங்கள் 18-ம் நாளை இந்த விழா கொண்டாடுவதற்கு ஏற்ற நாளாகப் பழைய நாட்களிலேயே கொண்டிருந்தனர். இதனைப் **பதினெட்டாம் பெருக்கு** என்று அழைப்பர்.

ஒவ்வொரு குடும்பமும் தமக்கேயுரிய விழாக்களையும் கொண்டாடிவந்தது. அவைகளில் தலைசிறந்து விளங்கியது **திருமணவிழா** ஆகும். குடும்பத்தைச் சேர்ந்த ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ திருமண ஏற்பாடு நடைபெற்றால், அதற்கு உற்றார், உறவினர், ஊரார் ஆகியோரை வரவழைத்து, அவர்களோடு சேர்ந்து உண்டு மகிழ்ந்திருத்தல் நடைபெறும். ஒவ்வொரு குடும்பத்திலும் தோன்றிய தலைசிறந்த முன்னோர்களை வீட்டுக்கடவுளராக மதித்து அவர்களுக்குப் படையல் போடுவதும் பழக்கமாக இருந்துவந்ததாகும். இது **வீட்டுக்கடவுளர்க்குப் படையல்விழா** எனப்படும்.

நாடாளும் மன்னன் மாற்றார்மீது போர் தொடுப்பதற்கு முன்னால் வீரர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் ஏற்படவேண்டி பெரும் விருந்து விழா ஒன்று அக்காலங்களில் நடத்தினன். வீரர்கள் பெருந்திரளாகக் கூடி சோறு உண்டு, ஆடிப்பாடி மகிழ்வர். இதனைப் **பெருஞ்சோற்று விழா** என்று கூறுவர். வீரக்கழலை அணிந்த வீரர்கள் மதுவை உண்டு மனங்களித்து ஆடும் விழா **உண்டாட்டு விழா** எனக் கூறப்படும்.

பண்டைத் தமிழர்கள் மேலே எடுத்துக் காட்டிய விழாக்களைப்போன்று பல்வேறு வகையான விழாக்களைத் தாம் மகிழ்ச்சியுறுதற்கு ஏற்ற வாய்ப்புகளாக நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டிருந்திருக்கின்றனர். இத்தகைய விழா நாட்களில் புலவர்கள் இலக்கியம் இயற்றுவதும், பாணர்கள் இசை



# (14)

புராணங்களில் தேவர்கள் மிகவும் சாதுக்கள் போலவும் அரக்கர்கள் கொடுமையாளர்கள் போலவும் அடிக்கடி கூறப்படுகின்றது. மாற்ருர் செய்யும் தவத்தைக் கெடுப்பதாக அசுரர் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. இராமாயணத்தில் இராமபிரானை முனிவர்கள் வேண்டிக் கொள்ளும்பொழுது "அரக்கர்கள் நாங்கள் இயற்றும் தவங்களைக் கெடுக்கின்றனர் அவர்களை அழிக்கவேண்டும்" என்று குறையைத் தெரிவிக்கின்றனர். ஆனல் தேவர்கள் அரசனை இந்திரன் கெடுத்த தவங்களுக்கு அளவேயில்லை யென்று சொல்லலாம். அவன் தவங்களை மட்டுமல்ல, தவஞ்செய்யும் முனிவர்களின் பத்தினிகளையேக் கெடுத்திருக்கிருன். தவஞ்செய்பவர்களின் கருவிலிருக்கும் சிசுக்களை அழித்திருக்கிருன். ஆனல் அவன் எந்த அரக்கர் கூட்டத்துடனும் சேர்த்து எண்ணப் படவில்லை. பெரிய தண்டனை எதுவும் தரப் படவுமில்லை.

தேவர்களுக்கு எதிராக அரக்கர்கள் போராடினுர்கள்; தேவர்கள் செய்யும் யாகத்தை அரக்கர்கள் தடுத்தார்கள் என்று இருக்கிறது. ஆனல் இந்திரன் யார் தவம் செய்தாலும், அது அரக்கராயினும் அல்லவராயினும், பாகுபாடு இன்றி, தவத்தை அழித்திருக்கிருன். அவனுக்கிருந்த அச்சமெல்லாம், தவஞ் செய்வோர் தவவலிமையால் தனது பதவிக்குப் போட்டியாக வந்துவிடக்கூடாது என்பதே. அதை மனதில்வைத்து, அவன் அழித்த தவங்கள், கலைத்த யாகங்கள் அளவிறந்தன.

அவனல் பாதிக்கப்பட்டோரில் பலர் அரக்கர் அல்லாதவர், தேவர்கள், தேவர்களுக்கு வேண்டியவர்களும் ஆகும்.

விசுவாமித்திரன் செய்த தவத்தைக் கெடுக்க, மேனகையை இந்திரன் அனுப்பினன். விசுவாமித்திரன் அசுரர்கூட்டத்தைச் சேர்ந்தவரா, தேவர்களுக்கு எதிரியா? கிடையாது. ஆனலும் அவர் தவத்தைக் கலைக்க இந்திரன் பாடுபட்டான். தவம் யார்செய்தாலும், அத்தவத்தால் தனக்கு ஆபத்து நேரலாம் என்று நினைத்தவுடன் இந்திரன் தனது தேவமாதரை—அரம்பை, ஊர்வசி கூட்டத்தினரை அனுப்புவான். இந்திரன் கெடுக்க விரும்பும் தவங்களில் பல, நல்லவர்களாகப் புராணங்களில் பரமபக்தர்களென்று கூறப்பட்டவர்களால் செய்யப்பட்டதாகும்.

பிரகலாதன் எவ்வளவு சிறந்த அரிபக்தன் தனது தந்தை இரண்யகசிபு கட்டளையிட்டும் "இரண்யாய நம" என்று சொல்ல மறுத்து "அரி நாராயண நம" என்று அரிநாமத்தை உச்சரித்தவன். அதற்காக இரண்யகசிபு கொடுத்த தண்டனைகளையெல்லாம் ஏற்று கடைசியாகத் தூணைக்காட்டி, அதிலிருந்து வெளிப்பட்ட நரசிம்மமூர்த்தியால் இரண்யகசிபைக் கொல்வித்தவன். விபீஷணனைவிட ஒருபடி முன்சென்று, தன் தந்தையை எதிர்த்துக்கொன்று, தேவர்களுக்கு உதவிசெய்தவன் பிரகலாதன். அங்ஙனமிருக்க பிரகலாதன்பால் இந்திரனுக்கு நன்றியறிதலும், நட்புரிமையும் இருக்கவேண்டும்.

---

இசைப்பதும், கூத்தர்கள் கூத்து ஆடுவதும், பொருநர்கள் நாடகம் ஆடிக்காட்டுவதும் ஆன சிறப்பியல்புகள் விழாவின் மகிழ்ச்சியை பெருக்குவதற்குப் பயன்பட்டுவந்தன.

ஒரு நாட்டிலுள்ள மக்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்கும், ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கும் விழா மிகமிகத் தேவைப்படுவதாகும். அந்தப் பண்பைப் பண்டைக்காலத் தமிழ்மக்கள் நன்கு உணர்ந்து, அழகுறப் பயன்படுத்திக்கொண்டிருந்திருக்கின்றனர்.

தந்தை இறந்தபின், பிரகலாதன் சிறிது காலம் அரசாண்டான். பின் அரசைவிட, அரிநாமமே சிறந்தது என்று கேட்டு, காட்டில் போய்த் தவஞ்செய்தான். பிரகலாதன் தவஞ் செய்யச் சென்றதும், இந்திரனுக்கு சிறு அச்சம் உண்டாகியது. உடனே அவனுடைய தவத்தைக் கெடுக்கத் திட்டமிட்டான். வழக்கம்போல் தேவமாதர்களை பிரகலாதன்முன் அனுப்பினான். அவர்கள் சென்று ஆடிப்பாடினார்கள், ஆடைகளைத் துறந்து அழகு நடனமும் செய்தனர். பிரகலாதனின் தவம் கெடவில்லை. கடைசியாகப் பிரகலாதனின் தவத்தைக் கெடுக்க இந்திரனே புறப்பட்டான்.

முன்பு சுக்கிராச்சாரியாரின் தவத்தைக் கெடுக்க தன் மகள் சயந்தியைச் சீடனைப்போல வேடமிட்டு அனுப்பினான். பின் திதி செய்த தவத்தைக் கெடுக்க தானே சீடனைப்போல வேடமிட்டு, திதிக்கு அடிமைவேலை செய்து அவள் தவத்தைப் பாழாக்கினான். அதே போன்று பிரகலாதனின் தவத்தைக் கலைக்கவும் இந்திரன் சீடனைப்போல வேடமிட்டுச் சென்றான்.

அகோரத் தவம் செய்யும் பிரகலாதனுக்கு அடிமையாக இந்திரன் பணிவிடைகளைச் செய்துவந்தான். பிரகலாதனின் ஒழுக்க சீலத்தில், ஆசார அனுஷ்டானங்களில் ஏதாவது சிறிது குறை வருகிறதாவென்று இந்திரன் கண்காணித்துவந்தான்.. திதிக்கு நேர்ந்ததைப்போல, சிறு குறை காணப்பட்டாலும் தவம் பயனற்றதாகிவிடும் என்பது இந்திரனின் எண்ணம். ஆனால் பிரகலாதனின் தவத்தில், ஆசாரத்தில் ஏதும் மாறுபாடு காணப்படவில்லை,

பிரகலாதனின் தவம் வளர்ந்தது, முடியுந்தருவாயும் வந்தது. அவன் செய்த அகோரத் தவத்துக்கு, பெற்றுள்ள தவவலிமைக்கு எந்த வரம் கேட்டாலும் இந்திரபதவியாயினும், சந்திரபதமாயினும் எது விரும்பினாலும் கிடைத்துவிடும். இந்திரன் மனமொடிந்து அச்சத்தால் நடுங்கியபடி இருந்தான். குருவுக்குச் சீடனிடம் உண்மையில் நம்பிக்கையும், பிரியமும் இருந்தது. இவ்வளவு காலமும் தானிட்ட வேலைகளைத் தட்டாது செய்து, அடிமையாகப் பணியாற்றிய சீடனைத் தவம் முடிந்த நேரத்தில் தனியே அனுப்ப அவருக்கு மனமில்லை.

“இவ்வளவு காலம் நமது ஆசிரமத்தில் பணிவிடை செய்த உனது குருபக்தியை நாம் மெச்சுகிறோம்! உனக்கு எது வேண்டும்? கேள் தருகிறோம்!” என்று தவத்தில் சிறந்த பிரகலாதன் கேட்டான்.

“ஸ்வாமி! தங்களுக்குப் பணிவிடை செய்ய எனக்குக் கிடைத்த வாய்ப்பே பெரிய பேறாகும்! குருவுக்குச் சீடன் காணிக்கை தரவேண்டுமேயன்றி, குருவிடம் சீடன் கேட்பது கூடாது!” என்று இந்திரன், சிறந்த சீடனைப் போல நடித்தான்.

தவமுனிவர் தம்முள் உவகையடைந்தார், தனது சீடனின் பெருந்தன்மை கண்டு. “இல்லை, மகனே! உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் தருகிறோம்! நீ பாடுபட்டு, பணிவிடை செய்ததற்குப் பதிலாக!” என்று குரு திரும்பக் கேட்டார்.

“எனக்கு வேண்டியது......” என்று சீடன் இழுத்தான்.

“என்னவேண்டுமானாலும் கேள் தருகிறோம்” என்று பிரகலாதமுனிவர் வாக்களித்தார். இவன்போன்ற இளம் சீடர்கள் என்ன வரம் கேட்கப்போகிறார்கள்? அழகான மனைவி வேண்டும், அரண்மனை வாழ்வு வேண்டும், அரசுவேண்டும், போக போக்கியங்கள் வேண்டும், ஏதோ இளவயதின் சபலம். கேட்டதைத் தன் தவவலிமையால் கொடுத்துவிடலாம் என்று குரு நிச்சயித்தார்.

சீடன் தயங்கியபடி நின்றான். கேட்பதற்குக் கூச்சப்படுகிறான் என்று நினைத்து “உம்! சீக்கிரம் கேள்! நீ கேட்பதைத் தட்டாமல் கொடுத்துவிடுகிறேன்” என்று குரு சொன்னார்.

“உங்கள் தவவலிமை முழுவதும் எனக்கு வேண்டும்!” என்று ஒரு போடு போட்டான். குருவுக்கு ஒன்றும் புரியவில்லை, “என்ன கேட்கிறாய்?” என்று திகைத்தார்.

“உங்கள் தவவலிமை முழுவதையும்! எதைக் கேட்டாலும் தருவதாக வரந்தீர்கள். இப்பொழுது கேட்கிறேன், உங்கள் தவவலிமை முழுவதும், எனக்குவேண்டும்!”

இதுவரை சீடன் வேடத்தில் நடந்த கபட நாடகத்தின் வஞ்சகம் பிரகலாதனுக்கு இப்பொழுதுதான் புரிந்தது. அவன்—இந்திரன் தன்னிடம் அடிமை வேலைசெய்தது, தனது தவத்தைக் கெடுக்க, தவத்தின் பலனை அபகரிக்க. தவத்தின் முடிவில், அவனிடம் மோசம்போய்விட்டோமென்று பிரகலாதன் உணர்ந்தான்.

“வரம் கொடுத்தீர்கள்! நானும் கேட்டேன்!

இப்பொழுது இல்லையென்று சொல்லிவிடுங்கள், நான் போகிறேன்!" என்று இந்திரன் அடியெடுத்துவைத்தான்.

வரத்தைக் கொடுத்துவிட்டுப், பிறகு அதை நிறைவேற்ற மறுப்பது தவறு. தவசிரேஷ்டர்களுக்கு இழுக்காகும். எனவே கொடுத்த வாக்கைக் காப்பாற்றவேண்டியதாகியது. வேறு வழியின்றிப் பிரகலாதன் கமண்டல நீரைத் தெளித்து, "எனது தவவலிமை முழுவதும், உனக்கேயாகுக!" என்று தாரை வார்த்துக்கொடுத்தார். பிரகலாதன் செய்த தவத்தின் பலன் முழுவதும் இந்திரனுக்குக் கிட்டியது.

எப்படியிருக்கிறது, விதைக்காது அறுக்கும், உழைக்காது உறிஞ்சும் தன்மை! மண்ணுலகத்தில் பூசுரர்களுக்கு அந்த வாய்ப்பு மனுநீதி தர்மத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்திரன் சுரர்களுக்கு—சுரலோகத்து—தேவலோகத்துக்குத் தலைவன். எனவே பாடுபடாது பலன் பெறும் முறையை அவன் கையாண்டான். பிரகலாதன் அகோரத் தவம் செய்தான். அதன் பலனை இந்திரன் பறித்து வந்தான். பிரகலாதன் பழையபடி அரிநாமத்தைச் சொல்லிக்கொண்டு பக்தர்களுடன் பஜனைக்கூடத்துக்குச் சென்றான்.

மாற்றானுக்கொண்டு எதிரிகளின் வலிமையைத் தானமாகப் பெற்றுவருவதில் இந்திரன் முதன்மையாக இருந்திருக்கிறான். பாரதத்தில் வேதியனாகச் சென்று யாசித்து, கர்ணனுடைய கவசகுண்டலங்களைப் பெற்றுவந்தான்.

முனிவர்களின் தவத்தைக் கெடுக்க அரக்கர்கள் முயலுவார்கள்; யாகத்தின்மீது தண்ணீரைக் கொட்டுவார்கள், பர்ணசாலைமீது நெருப்பையிடுவார்கள், ஹோமத்தின் மத்தியில் இறைச்சியைப் போடுவார்கள் என்றெல்லாம் அசுரர்களைத் தாழ்த்திக் கூறப்படுகிறது. ஆனால் இந்திரன் அந்த முறைகளையெல்லாம் ஒன்று விடாமல் செய்திருக்கிறான்.

ஒருசமயம் வற்சநாபன் என்ற முனிவர் கடுந் தவம்புரிந்துகொண்டிருந்தார். அவர் அரக்கரல்ல, தேவர்களைச் சார்ந்தவர், ரிஷி சிரேஷ்டர்களில் ஒருவர். அவர் செய்யும் தவநிலை இந்திரன் காதுக்கு எட்டியது. எப்பொழுதும் இந்திரனுக்குக் குறுகுறுத்த நெஞ்சம், எங்கு யார் வந்து இந்திரப் பதவியைத் தட்டிக்கொண்டு போய்விடுகிறார்களோ என்ற பயம். யார் தவம் செய்தாலும் தனது பதவிக்கு ஆபத்து என்ற நடுக்கம் இந்திரனுக்கு உண்டாகிவிடும். அவ்வளவு பலவீனம்! ஆதலால் வற்சநாபன் கடுந்தவம் புரிகிறார் என்று கேள்விப்பட்டதும், அந்தத் தவத்தைக் கலைக்க முற்பட்டான். தேவமாதர்கள், கூட்டத்தை அனுப்பமுடியவில்லை, ஏனென்றால், வற்ச நாபன் நீண்டகாலமாக அமர்ந்த இடத்தை விட்டு அசையாது தவஞ்செய்ததால் அவரைச் சுற்றிப் புற்று வளர்ந்து மூடிக்கொண்டுவி டது. புற்றில் இருந்தபடி அவர் கடுந்தவ செய்துகொண்டிருக்கிறார்.

இந்திரன் பெரிய மழையை அனுப்பினான் பெருமழை பெய்தபோதும், புற்று கரையாம இருந்தது. பின் இந்திரன் பலமான இடிகளை புற்றின்மீது வீசினான், புற்று இடிந்தது உடனே மழைகளை அனுப்பி, வெள்ளத்தை புற்றுக்குள் போகச்செய்தான். புற்றுக்கு தண்ணீர் நிரம்பினால், உள் அமர்ந்திருக்கு தவ முனிவரின் யோகம் கலைந்துவிடும் என் அவன் திட்டமிட்டான். பெரிய மழைபெய் புற்றைச் சுற்றித் தண்ணீர் நிரம்ப ஆரம்பி ததும், அதை அறிந்த தருமதேவன் ஒ எருமைமாடு உருவமெடுத்து, புற்றை மூடி கொண்டு நின்றானும். எவ்வளவுதான் ம கொட்டினாலும், அதைத் தாங்கிக்கொண் தருமதேவன் இருந்தான். புற்றினுள்ளிருந் வற்சநாபன் ஏழுநாட்கள் கழித்து யோகத் லிருந்து கண்விழித்து, தனது தவத்தை பாதுகாத்து வந்த தருமதேவனைப் பார்த் "நீ சிரஞ்சீவியாக இருக்க!" என்று வ தந்து வேறு இடம் சென்றுவிட்டாராம்.

எருமைமாட்டு உருவில் மழையைத் தடுத் தருமதேவன் நின்றதால், அதிலிருந் எருமைமாடுகள் மழையைப்பற்றிக் கவல் படுவதில்லையாம். மழையை எருமைமாடுக தாங்கிக்கொள்வதற்குப் புராணங்கள் தரு கதை இது. இந்தக் கதைப்படி பார்த்தா இந்திரன் ஒரு முனிவரின் தவத்தைக் கலைக் தண்ணீரைக் கொட்டுவதல்ல, பெரிய பெ மழைகளை அனுப்பியிருக்கிறான், பலமா இடிகளை ஏவியிருக்கிறான். ஆனால் சுபா வதைப்படலம், கரன் வதைப்படலம் போன் இந்திரன் வதைப்படலம் ஒன்றும் உண்ட வில்லை.

தண்ணீரைக் கொட்டி யாகத்தை அ பது மட்டுமல்ல, இரத்தம் மாமிசம், இ களைச் சொரிந்து யாக மேடையை அசுரா கெடுத்தார்கள் என்று சொல்லப்பட்டா வற்சநாபன் தவத்தைக் கலைக்க, இந்தி தண்ணீரையும், நெருப்பையும் ஏவின ஆனால் பிரிதோரிடத்தில், வச்சிராங்கி எ பெண் செய்த தவத்தைக் கெடுக்க இந்தி பலவித இன்னல்கள் செய்திருக்கிறான்.

(தொட

# பொங்கல் உண்போம்

●

புதுநெல் லரிசியு னோடு—பால்
பொங்கல் பொங்கிட எங்கும்
அதிர்வளை மங்கை மார்கள்—தம்
அன்பும் தேனும் கலந்து
முதிரா வழுக்கை இளநீர்—நனி
முற்றற் கழையின் சாறும்
உதிர்மா துளையின் முத்தும்—தந்
துவக்க உவக்க நின்றார்

பொன்வண் ணப்புத் துருக்கு—நெய்
புறங்கை ஒழுகப், பொங்கல்
இன்பம் பெறுமா றுண்போம்—எம்
இனிதாம் பொழுதே வருவாய்
சொன்னோம் பொங்கல் வாழ்த்தே—எம்
தூய்மைத் தமிழால் நாங்கள்
தென்பாங் கடைந்த செல்வம்—எம்
திரவிடம் வாழிய நன்றே.

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

# பத்து ரூபாய் நோட்டு

சுந்தரம் வீட்டைவிட்டுக் கிளம்பும்பொழுதே அவனுடைய அப்பா எச்சரிக்கை செய்தார். "இந்தப் பத்து ரூபாய் நோட்டைத் தனியாகப் பத்திரமாக வைத்துக்கொள்! இந்தப் பணத்தை டிக்கட் வாங்க வைத்துக்கொள்! ரயிலில் திருட்டு பயம் அதிகமிருக்கும். நெருக்கடி அதிகமில்லாத வண்டியில் ஏறிக்கொள்! டவுன் ஸ்டேஷன் வந்ததும் இறங்கி. ஊருக்குள் போய் சாமான்களையெல்லாம் வாங்கினால் பாக்கி ஒரு ரூபாய் மீதமாகும். உனக்கு நடுப்பகல் உணவுக்கும் திரும்பிவரச் செலவுக்கும் சரியாக இருக்கும். நான் குறித்துக்கொடுத்தப் பட்டியலில் உள்ள சாமான்களையெல்லாம் தவறாமல் வாங்கிவா!"

"ஒன்றும் கவலைப்படவேண்டாம்! சரியாக வாங்கி வந்துவிடுகிறேன்! ரயிலுக்கு நேரமாகிவிட்டது, நான் போகிறேன்" என்று மேஜைமேல் வைக்கப்பட்ட பணத்தை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு சுந்தரம் அவசரமாக வெளியேறினான்.

"நெருப்புப்பெட்டி அறுபது குச்சி உள்ளதாக, புலிமார்க் போட்டதாகப்பார்த்து வாங்கு! சணல் கயிறு....." அவர் கடைசி நேரக் குறிப்புகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார். சுந்தரம் அதற்குள் கூப்பிடுதூரத்தைக் கடந்துவிட்டான். சுந்தரத்திற்கு மறதி எப்பொழுதும் அதிகம். சொன்னதை சுலபமாக மறந்துவிடுவான், ஐந்து நிமிடத்துக்குள் கையில் வைத்திருந்த பேனாவை எங்கேயாவது வைத்துவிட்டு, அதைத் தேட இரண்டுமணிநேரம் செலவழிப்பான். ஆதலால்தான், சுந்தரத்தைப் பக்கத்து நகரத்துக்குச் சாமான்கள் வாங்கிவர அவன் தந்தை அனுப்பியபொழுது. விளக்கமாக எல்லாவற்றையும் எழுதிக்கொடுத்துக், கடைசியாக ஞாபகப்படுத்தியும் அனுப்பினார்.

சுந்தரம் டிக்கட்டை வாங்கியதும் கூட்டத்தில் கலக்காமல், நெருக்கடி அதிகமில்லாத வண்டி ஒன்றில் ஏறி. உட்கார்ந்துகொண்டான். அந்த வண்டியில் அவனைத்தவிர மூன்றுபேர்கள் உட்கார்ந்திருந்தனர். ஒருவர் கண்ணாடியணிந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் கண்ணியமானவராகத் தோன்றியது. இரண்டாவதாக மூலையில் உட்கார்ந்திருந்தவன், முரட்டு மீசையுடன். பரட்டைத் தலையுடன் இருந்தான். அவனிடம் கொஞ்சம் கவனிப்பாக இருக்கவேண்டுமென்று சுந்தரம் தன் மனதிற்குள் குறித்துக்கொண்டா மூன்றாவதாக இருந்தவன் மற்றொரு மூலையில் கா நீட்டிப் படுத்துக்கொண்டிருந்தான். அவன் எப்படி பட்டவன் என்று தெரியவில்லை. இருந்தாலு அவனிடமும் கண்காணிப்பாக இருப்பது நல்ல என்று தோன்றியது. கண்ணாடிபோட்டுக் கொஞ் உள்ளவர்போலத் தோன்றியவர் பக்கத்தில் போ சுந்தரம் உட்கார்ந்துகொண்டான். அவர் ஒன்று பேசாமல். கொஞ்சம் இடத்தை ஒழித்துவிட்டு பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார்.

ரயில் நகர்ந்ததும், கொஞ்சம் நிம்மதியுண்டான பக்கத்திலிருப்பவர் படித்துப் போட்ட பேப்ப எடுத்துச் சுந்தரம் படித்துக்கொண்டிருந்தான். ப கும்பொழுதும் சுந்தரம், எதிரில் உட்கார்ந்திரு முரடன்மீது ஒரு கண் வைத்தபடிதான் இருந்தா திருடவருபவர்கள் எப்பொழுது திருடுவார்கள் என் சொல்வார்கள். 'இந்தப் பூனையும் பாலைக்குடிக்கும என்று இருந்துவிட்டுக். கொஞ்சம் அலட்சியமாக இருந்தால். பையில் இருப்பதைப் பறித்துப்போய்வி வார்கள். சுந்தரம் தன்னை அடிக்கடிக் கண்காணிப்ப முரடன் உணராமலில்லை, அடுத்த ஸ்டேஷன் வ தும் அவன் இறங்கிப் போய்விட்டான். முரட இறங்கிப்போனதும். சுந்தரத்தின் கண்காணிப் படுத்து இருப்பவனின்மீது விழுந்தது. அவனு அதற்கு அடுத்த ஸ்டேஷன் வந்ததும் இறங்கிவி டான். வண்டியில் பக்கத்திலிருந்த கண்ணாடிக்கா ரும் சுந்தரமும் தவிர, வேறு யாருமில்லை சுந்தரம் கொஞ்சம் நிம்மதியடைந்து, அவருட பேசத் தலைப்பட்டான். இருவரும் அவரவர்களுக்கு தெரிந்ததை—கேட்பவருக்கு முன்கூட்டி எவ்வள தெரியும் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல். பே கொண்டிருந்தார்கள். ஏதோ, நேரம் போவதற்காக பேசிக்கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் இறங்கவேண்டிய ரயில் நிலையம் வந்தத "நான்கூட இறங்கிப் போய்க் காபி சாப்பிடவேண டும்" என்று பக்கத்திலிருந்தவர் இறங்கி, புகைவண் நிலையச் சிற்றுண்டிச்சாலைக்குப் போனார். கீழே கிடந்த செருப்பைத் தேடிப் போட்டுக்கொண் சுந்தரம் இறங்கினான். கடைசியாகப் பையை தொட்டுப் பார்த்தான், பத்து ரூபாய் நோட்டை காணோம்!

சுந்தரத்திற்கு திகில் வந்தது. பரபரப்புடன் பையைத் துழவினான். நோட்டு இல்லை! மீண்டும் வண்டிக்குள் எறிக் கீழே பார்த்தான், விழுந்துகிடக்கிறதாவென்று. தீய்ந்துபோன நெருப்புக்குச்சிகளும், பீடித்துண்டுகளும் கிடந்தனவேயன்றிப் பத்துரூபாய் நோட்டைக் காணோம். பையில் வைக்கப்பட்ட நோட்டு எப்படி மாயமாக மறைந்தது என்று புரியவில்லை. வண்டியிலிருந்த முரடன். படுத்துக்கொண்டிருந்த சோம்பேரி. இவர்களின் பக்கத்தில் போகாமலே சுந்தரம் இருந்தான். இருந்தும் பத்து ரூபாய் நோட்டு பறிபோய்விட்டது.

பத்து ரூபாய் நோட்டு எப்படிப்போனது என்று சுந்தரத்திற்குப் புரியவேயில்லை. இவ்வளவுக்கும் வீட்டைவிட்டுக் கிளம்பும்பொழுது "பத்துரூபாய் நோட்டைப் பத்திரமாக வைத்துக்கொள்! நெருக்கடியில் சிக்கிக்கொள்ளாதே! திருட்டுபயம் அதிகம்!" என்றெல்லாம் அவன் அப்பா எச்சரிக்கை செய்து தானே அனுப்பினார். மிகக் கவனிப்புடன், அவனும் அந்த நெருக்கடியை நீக்கி, ரயிலில் ஏறினான். ஏறியதும், அங்கு சந்தேகப்படத்தக்கவர்களாகக் காணப்பட்ட இருவரிடமிருந்தும் அவன் தூர விலகியே இருந்தான். இவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருந்தும் பத்து ரூபாய் நோட்டு களவுபோய்விட்டது. அந்தத் திருட்டுப் பயத்தை எச்சரித்து அப்பா அனுப்பினாரோ. அதே திருட்டு மோசத்தில் சுந்தரம் சிக்கிவிட்டான். இனிமேல் என்ன செய்வது? எங்கு தேடுவது? யாரைப்பிடித்துக் கேட்பது? கையுங் களவுமாகப் பிடிக்கும்பொழுதே, திருடர்கள் தப்பிவிடுகிறார்கள். இந்த மாயக்கள்ளனை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? சுந்தரத்திற்கு ஒன்றும் புரியவில்லை.

திடீரென்று சுந்தரத்திற்கு ஒரு சந்தேகம் வந்தது! பத்திரிக்கை வைத்துப் படித்துக்கொண்டிருந்த கண்ணாடிக்காரர்—அவர் வைத்திருந்த தோற்பெட்டி திறந்திருந்தது, மேல் பூட்டுச் சரியாகப் பூட்டப்படாமல். சுந்தரம் பெட்டியைத் திறந்தான், பத்து ரூபாய் நோட்டு, சரியாக மடிக்கப்படாமல் மேல் கிடந்தது!

சே! அவனால் நம்பமுடியவில்லை, அவர் அந்தக் காரியத்தைச் செய்திருப்பாரென்று. முதலில் அவன் சந்தேகப்பட்டது. எதிரில் இருந்த முரடனையும், படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தவனையும். அவர்கள் தன்மையில் நல்லவர்களாயிருக்க, சுந்தரம் யாரை மிகக் கண்ணியமானவர் என்று நம்பிப், பக்கத்தில் உட்கார்ந்து, தாராளமாகப் பழகினானோ அவருடைய பெட்டியில்தான் பத்துரூபாய் நோட்டுக் கிடைத்தது. இந்தப் போலித் தன்மையும் வெளிவேடமும் சுந்தரத்துக்குக் கோபத்தை உண்டாக்கின. போலீசில் ஒப்படைத்துத் தகுந்த தண்டனை தரவேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. மறுகணம், ஏன் அந்தத் தொல்லை என்று தோன்றியது. அவன் நம்மை ஏமாற்றியதாக நினைத்துக்கொண்டிருக்கிறான் அவனை நாம் ஏமாற்றிவிடுவோம் என்று முன்போலப் பெட்டியை மூடிவைத்துவிட்டுச். சுந்தரம் இறங்கி வந்துவிட்டான். காபி குடிக்கப்போனவர்—அவன் சிற்றுண்டிச் சாலையில் மார்பைத் தடவினானே என்று சுந்தரம் நினைத்துக்கொண்டான்—அவர் திரும்பி வந்தார். சுந்தரம் ஏதும்பேசாமல் நிலையத்தைவிட்டு வெளியேறினான்.

தானெடுத்துச் சென்ற பட்டியல்படி எல்லாச் சாமான்களையும் சுந்தரம் வாங்கிக்கொண்டு அன்று மாலை ஊர் திரும்பினான். திரும்பி வரும்பொழுது, ரயிலில் யாருடனும் பேச்சுக்கொடுக்காமல் வந்தான். பையில் வைத்திருந்த பத்துரூபாய் நோட்டே மாயமாக மறையும்பொழுது. இப்பொழுது வாங்கிவந்த சாமான்கள் சிறிது கவனம் இழந்தாலும் பறிபோய்விடும். எனவே மிகக் கவனமாக இருந்து வாங்கிய சாமான்களை ஒன்றும் தவறவிடாமல் வீடுகொண்டு வந்து சேர்த்தான்.

"எப்படி இவ்வளவையும் வாங்கினாய்?" என்று அவனுடைய அப்பா ஆச்சரியத்துடன் கேட்டார்.

"என்ன கஷ்டம்! ஒரே கடையிற் வாங்காமல், ஒவ்வொரு கடையிலும் கேட்டு. எந்தக் கடையில் நல்ல சாமான் இருந்ததோ அங்கு பார்த்து வாங்கினேன். ஒன்றுகூட விடவில்லை" என்று சுந்தரம் பெருமிதத்துடன் கூறினான்.

"அதற்குச் சொல்லவில்லை. காலையில் உன்னிடம் பத்துரூபாய் நோட்டைத் தனியாகவும், இரயில் டிக்கட்டுக்குள்ள பணத்தைத் தனியாகவும் தந்தேன், நீ போகிற அவசரத்தில் டிக்கட்டுப் பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, பத்துரூபாய் நோட்டை மேஜைமேல் மறதியாக வைத்துப்போய்விட்டாய்; பின் எப்படி இந்தச் சாமான்களை வாங்கினாய்?" என்று காலையில் அவன் மறந்துவிட்டுப்போன பத்து ரூபாய் நோட்டை அவர் எடுத்துக்காட்டினார்.

"அப்படியானால் அந்தப் பத்துரூபாய் நோட்டு...!" என்று சுந்தரம் வாயடைத்து நின்றான்.

# வானம்பாடி

[புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்]

வானந்தான் பாடிற்று? வானிலவு பாடிற்று?
தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்று? நடுங்கும் இடிக்குரலும்
மெல்லிசை பயின்று மிகஇனிமை தந்ததுவோ?

வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்
தானூதும் வேய்ங்குழலா? யாழா? தனியொருத்தி
வையத்து மக்கள் மகிழக் குரல் எடுத்துப்
பெய்த அமுதா? எனநானே பேசுகையில்

நீநம்பாய் என்று, நிமிர்ந்த என் கண்ணேரில்
வானம்பாடிக் குருவி காட்சி வழங்கியது
ஏந்தும்வான் வெள்ளத்தில் இன்பவெள்ளந் தான்கலக்க
நீந்துகின்ற வானம்பாடிக்கு நிகழ்த்தினேன்:

உன்றன் மணிச்சிறகும் சின்ன கருவிழியும்
என்றன் விழிகட்கே எட்டா உயர்வானில்
பாடிக்கொண் டேயிருப்பாய்! பச்சைப் பசுந்தமிழர்
தேடிக்கொண் டேயிருப்பார் தென்பாங்கை உன்பால்!
அசையா மகிழ்ச்சி அடைகநீ! உன்றன்
இசை மழையால் இன்புறுவோம் யாம்.

பண்டைக்காலத் தமிழ் மக்கள், பழம்பெருங் லந்தொட்டே, மிகச் சிறந்த நாகரிகத்தில் ளர்ந்து வந்தனர் என்பதை எடுத்துக்காட்டி றகும் அடையாளங்கள் பலப்பல. அப்பழம் பரும் காலத்தில் நாகரிகத்தில் மேம்பாடுற்று ளங்கிய வேறுசில நாடுகளோடு அக்காலத் மிழகத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ான, தமிழகம், ஒவ்வொரு துறையிலும் வ்வளவு வியக்கத்தக்க நுணுக்கமான அறி வையும், சிறப்பான ஆற்றலையும், அழகான மைப்பையும், நேர்த்தியான பழக்கத்தையும் காண்டிருந்தது என்பதைத் தெளிவாக றிந்துகொள்ளலாம். இடைக்காலத்தில் தமி கத்தில் ஏற்பட்ட குழப்பங்களும், குளறுபடி ளும் தமிழக நாகரிக வளர்ச்சியில் தேக்கத்தை ண்டாக்கி, இப்பொழுது தமிழகத்தை மிகப் ன்னணியில் இருக்கும் ஒரு நாடாக ஆக்கி ட்டன.

பண்டைக்காலம் என்னும்போது பெரும் லும் கி.பி. இரண்டாவது நூற்றுண்டுக்கு ன்புள்ள சங்க காலத்தையும், சிற்சில பாழுது பிற்காலச் சோழர் காலம் வரையிலு ள்ள காலத்தையும் அதாவது கி.பி. பன் ரண்டாம் நூற்றுண்டு வரையிலுமுள்ள லத்தையுந்தான் கொள்கிறோம்

பண்டைக்காலத் தமிழரின் நாகரிகச் சிறப் ப விளக்கிக்காட்டும் அடையாளங்களில், வர்கள் கொண்டிருந்த அளவை முறைகள் ன்றுகும். அந்தக் காலத்தில் கொண்டிருந்த ளவைகளில் காலப்போக்கில் மறக்கப் ட்டவை போக, ஒரு சில இப்பொழுதும் ழக்காற்றில் இருந்துவருவதைக் காணலாம்.

பண்டைத் தமிழர் அளவைகளை எண் ணல்அளவை, எடுத்தல்அளவை, முகத்தல் அளவை, நீட்டல்அளவை என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்தனர்.

**எண்ணலளவை :** எண்ணிப் பார்க்கப்படும் அளவை எண்ணலளவை எனப்படும். அதனைச் சிற்றிலக்கம், பேரிலக்கம் என்று இரு வகையாகப் பிரிப்பர். அரை, கால், அரைக் கால், வீசம் போன்ற ஒன்றுக்குக் குறைவு பட்ட எண்களைச் சிற்றிலக்கம் என்றும், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு முதலிய முழு எண்களைப் பேரிலக்கம் என்றும் கூறு வர். சிற்றிலக்கம் என்பது இருவகையாகப் பிரிக்கப்படும்; ஒன்று கீழ்வாயிலக்கம், மற் றொன்று மேல்வாயிலக்கம். கீழரை (1/640), கீழ்க்கால் (1/1280), கீழரைக்கால் (1/2560), கீழ்வீசம் (1/5120) முதலியன கீழ்வாய்ச் சிற்றி லக்கணம் என்று சொல்லப்படும். மேலரை (1/2), மேற்கால் (1/4), மேலரைச்கால் (1/8), மேல் வீசம் (1/16) முதலியன மேல்வாய்ச் சிற்றிலக்கம் என்று சொல்லப்படும். மேல் வாய்ச் சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் மேல் முந்திரி (1/320) என்று சொல்லப்படும் முந்திரி யாகும். கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தில் அடிமட்ட எண் கீழ்முந்திரி (1/102400) ஆகும். கீழ்வாய்ச் சிற்றிலக்கத்தின் அடிமட்ட எண்ணுகிய கீழ் முந்திரியைக் காட்டிலும் மிக நுண்ணிதான அளவைகளும் உண்டு. பண்டைத் தமிழர் கணக்கு முறையில் எவ்வளவு சிறந்து விளங்கி யிருந்தனர் என்பதற்கு அடியிற் காட்டப் பெறும் கீழ்வாயிலக்க வாய்பாடே சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### கீழ்வாயிலக்க வாய்பாடு

| | |
|---|---|
| 1/2,3238245,3022720,0000000 | = 1 தேர்த்து |
| 1/3575114,6618880,0000000 ($6\frac{1}{2}$ தேர்த்து) | = 1 நுண்மணல் |
| 1/35751.1466188.8000000 (100 நுண்மணல்) | = 1 வெள்ளம் |

| | | |
|---|---|---|
| 1/595,8524436,4800000 | (60 வெள்ளம்) | =1 குரல்வளைப்பிடி |
| 1/14,8963110,9120000 | (40 குரல்வளைப்பிடி) | =1 கதிர்முனை |
| 1/7448155,5456000 | (20 கதிர்முனை) | =1 சிந்தை |
| 1/532011,1104000 | (14 சிந்தை) | =1 நாகவிந்தம் |
| 1/31294.7712000 | (17 நாகவிந்தம்) | =1 விந்தம் |
| 1/4470.6816000 | (7 விந்தம்) | =1 பாகம் |
| 1/745,1136000 | (6 பாகம்) | =1 பந்தம் |
| 1/149,0227200 | (5 பந்தம்) | =1 குணம் |
| 1/16,5580800 | (9 குணம்) | =1 அணு |
| 1/2,3654400 | (7 அணு) | =1 மும்மி |
| 1/2150400 | (11 மும்மி) | =1 இம்மி |
| 1/102400 | (21 இம்மி) | =1 கீழ்முந்திரி |
| 1/320 | (320 கீழ்முந்திரி) | =1 மேல்முந்திரி) |

## மேல்வாய்ச் சிற்றிலக்க வாய்பாடு

| | | |
|---|---|---|
| 1/320 | | = முந்திரி |
| 1/160 | (2 முந்திரி) | = அரைக்காணி |
| 1/80 | (2 அரைக்காணி) | = காணி |
| 1/40 | (2 காணி) | = அரைமா |
| 1/20 | (2 அரைமா) | = ஒருமா |
| 1/10 | (2 மா) | = இருமா |
| 1/5 | (2 இருமா) | = நான்மா |
| 1/64 | | = கால்மாகாணி |
| 1/32 | | = அரைமாகாணி |
| 1/16 | | = மாகாணி |
| 1/8 | | = அரைக்கால் |
| 1/4 | | = கால் |
| 1/2 | | = அரை |
| 1/1 | | = ஒன்று |

இத்தகைய எண்கள் தொல்காப்பியர் காலத்திலேயே, ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே, வழக்காற்றில் இருந்துவந்தன என்று ஆராய்ச்சியாளர்களால் கூறப்படுகிறது.

**எடுத்தலளவை :** எடுத்து அல்லது நிறுத்துப் பார்க்கப்படும் அளவை எடுத்தலளவை என்று சொல்லப்படும். பொருள்களை நிறுக்கத் தராசு அல்லது தூக்குக்கோல் என்னும் கருவியைப் பயன்படுத்துவர். பொன், மணி போன்ற மிக நுண்ணிய பொருள்களை நிறுக்க ஒருவித சிறிய எடைகளையும், பிற பெரும் பொருள்களை நிறுக்கப் பெரிய எடைகளையும் பயன்படுத்திவரலாயினர். பொன் மிக ஏராளமாக இருந்தால் அதுவும் பிற பொருள்கள் போல் பெரிய எடைகளால் நிறுக்கப்படும். பொன்னிறை அளவையைப் பொன்னிலக்கம் என்று அழைப்பர்.

## பொன்னளவை

| | | | |
|---|---|---|---|
| 4 நெல் | = | 1 குன்றிமணி | |
| 2 குன்றிமணி | = | 1 மஞ்சாடி | |
| 2 மஞ்சாடி | = | 1 வல்லம் | (பண... தூக்கம்) |
| 10 வல்லம் | = | 1 கழஞ்சு | (1/6 அ... ன்சு) |

## பிறபொருளளவை

| | | | |
|---|---|---|---|
| 4 கஃசு | = | 1 பலம் (தொடி) | |
| 8 பலம் | = | 1 சேர் | |
| 5 சேர் | = | 1 வீசை | |
| $2\frac{1}{2}$ வீசை | = | 1 துலாம் | (கா. தூக்கு நிறை) |
| 8 வீசை | = | 1 மணங்கு | |
| 20 மணங்கு | = | 1 கண்டி (பாரம்) | |

இந்த எடைகளைப் படிக்கற்கள் என்... சொல்லுவர். படிக்கற்கள் சரியாக இருக்கின்... னவா என்று அரசைச் சேர்ந்த தணிகைய... ளர்கள் சரிபார்த்து அரசமுத்திரையிடுவ... அரசமுத்திரை யிடப்பட்ட அதனை அளவு... கல், குடிஞைக்கல், பாடிக்கல், பண்டாரக்க... என்ற பெயர்களில் ஒன்றால் குறிப்பிடுவ... நகரங்களில் அதனை நகரக்கல் என்று அழை... பதும் உண்டு. பெருவாரியாகவுள்ள பொன்... நிறுக்க ஆணிக்கல் என்னும் நிறைக்கல்லை... பண்டைக்காலத்தில் கொண்டிருந்தனர். படி... கற்களைப் பெரும்பாலும் இரும்பினால் செய்... வைத்துக்கொள்வது தொன்று தொட்... இருந்துவரும் பழக்கமாகும்.

**முகத்தலளவை :** முகந்து அளக்கப்படு... அளவை முகத்தலளவை என்று பெ...

பெறும். முகந்து அளக்கும் கருவியைப் படி என்று கூறுவர். நாகரிகத்தின் துவக்க நாட்களில் மூங்கிலின் இரண்டு கணு உள்ள பகுதியை எடுத்துக்கொண்டு ஒரு கணுவை வைத்துக்கொண்டு, மேல் கணுவை செதுக்கித் தள்ளிவிட்டு, அதனை அளவுகருவியாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். அதனைப் படி என்று அழைத்தனர். பிறகு மரத்தில் அளவுகருவி செய்துகொண்டபோது அதனை மரக்கால் என்று அழைத்தனர். பின்னர் நாளடைவில் இரும்பு, பித்தளை போன்ற கனிகளால் முகத்தலளவைக் கருவிகள் செய்துகொள்ளப்பட்டன.

முகந்தளக்கப்படும் பொருள்களில், நெல் முக்கியமானதாகவும், முதன்மையானதாகவும் கொள்ளப்பட்டதால், முகத்தலளவைக்கு நெல்லிலக்கம் என்ற பெயர் உண்டு.

## முகத்தலளவை

| | | |
|---|---|---|
| 2 செவிடு | = | 1 பிடி |
| 5 ,, | = | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | = | 1 உழக்கு |
| 2 உழக்கு | = | 1 உரி |
| 2 உரி | = | 1 நாழி |
| 8 நாழி | = | 1 குறுணி (மரக்கால்) |
| 2 குறுணி | = | 1 பதக்கு |
| 2 பதக்கு | = | 1 தூணி (காடி) |
| 3 தூணி | = | 1 கலம் |
| 400 குறுணி | = | 1 கரிசை (பறை) |

முகத்தலளவைகளில் முக்கியமாக நாழி, மரக்கால் ஆகிய இரு அளவைகளுக்கும் அரச முத்திரை யிடப்படும். பிற்காலச் சோழர்காலத்தில் அரசனுடைய முகத்தலளவைகளில் அரசனுடைய பெயரும், கோயில் முகத்தலளவைகளில் கோயிற் கடவுளின் பெயரும் பொறிக்கப்படுவது வழக்கம். சோழாந்தகன் நாழி, அருண்மொழித்தேவன் மரக்கால் என்பன அரசன் பெயரைத் தாங்கிய அளவைகளாகும். ஆடவல்லான் மரக்கால், செப்புக்கால் சிற்றம்பலமுடையான் மரக்கால் என்பன கடவுள் பெயரைத் தாங்கிய அளவைகளாகும்.

பெரும் முகத்தலளவைகளில் மண்டலத்துக்கு மண்டலம் வேறுபாடும், தனித்தனிப் பெயர்களும் இருப்பதுண்டு. பாண்டி நாட்டில் கோட்டை என்பது 21 மரக்கால் கொண்டதாகவும், வடசோழநாட்டில் புட்டி என்பது 40 மரக்கால் கொண்டதாகவும் வழங்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் 12 மரக்கால் கொண்டது ஒருகலமாகவும்; வேறு சில இடங்களில் 36 மரக்கால் கொண்டது ஒரு கலமாகவும் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**நீட்டலளவை :** நீளம், அகலம், உயரம் போன்றவைகளை அளந்துபார்க்கும் அளவைக்கு நீட்டலளவை என்று பெயர். நீட்டலளவையை வழியளவை என்றும், நிலவளவை என்றும் இரண்டாகப் பகுப்பர். நிலவளவையைக் குழிக்கணக்கு என்றும் கூறுவர்.

## வழியளவை

| | | |
|---|---|---|
| 8 தோரை (நெல்) | — | 1 விரல் |
| 12 விரல் | — | 1 சாண் |
| 2 சாண் | — | 1 முழம் |
| 4 முழம் | — | 1 பாகம் அல்லது தண்டம் |
| 2000 தண்டம் | — | 1 குரோசம் (2¼ மைல்) |
| 4 குரோசம் | — | 1 யோசனை |
| 7½ நாழிகை வழி | — | 1 காதம் (10 மைல்) |

## குழியளவை

| | | |
|---|---|---|
| 16 சண் | — | 1 கோல் |
| 18 கோல் | — | 1 குழி |
| 100 குழி | — | 1 மா |
| 240 குழி | — | 1 பாடகம் |
| 20 மா | — | 1 வேலி |

சங்க காலத்தில் செய் என்ற ஒரு நில அளவை இருந்திருக்கிறது. அதுவேலியின் வேறொரு பெயராக இருந்திருக்கக்கூடுமோ என்று ஆராய்ச்சியாளர்களால் ஐயுறப்படுகிறது.

பண்டைக்காலத் தமிழரசர்கள் நிலங்களை அவ்வப்போது சரியாக அளந்துபார்த்து, அவற்றிற்கு ஏற்ற நிலவரியை விதித்துவந்தனர் என்று தெரியவருகிறது. இடைக்காலத்தில் முதலாம் இராசராச சோழன் காலத்தில் ஒருமுறையும், முதற் குலோத்துங்கச் சோழன் காலத்தில் ஒரு முறையும், மூன்றும் குலோத்துங்கச் சோழன் காலத்தில் ஒருமுறையும் நிலங்கள் அளந்து பார்க்கப்பட்டன என்று கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. அவ்வளவையை நடத்திய அரசியல் அலுவலாளனுக்கு **உலகளந்தான்** என்ற பெயரும், அவன் கையாண்ட அளவுகோலுக்கு **உலகளந்தகோல்** என்ற பெயரும் வழங்கிவந்தனவாகத் தெரியவருகின்றது.

நாட்டையும், நாட்டின் எல்லைகளையும் அளப்பதற்கு என்று கொண்டிருந்த கோல் இறையிறுக்குங்கோல் என்று பெயர்பெற்றிருந்தது. குடி தாங்கிக்கோல் என்றும் ஒருவகை அளவு கோலும் முன்காலத்தில் நடைமுறையில் இருந்துவந்ததாகத் தெரியவருகின்றது.

அக்காலத்தில் நிலம் மிக நுட்பமாக அளக்கப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டு: "ஆக இறையிலி நீங்கு நிலம் முக்காலே இரண்டுமாக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமா முக்காணிக்கீழ் முக்காலே நான்குமா அரைக்காணி முந்திரைக்கீழ் நான்குமாவினுல் இறைகட்டின காணிக்கடன்" என்பதாகும். இதில் குறிக்கப்பட்டுள்ள நில அளவு 1/52428800000 ஊர் நிலமாகும்.

பண்டைத்தமிழ்மக்கள் கால அளவையையும் மிகத் திறமையோடு கணித்துவந்திருக்கிறார்கள். ஞாயிறு, திங்கள், உடுக்கள் இவைகளின் அசைவு, மாற்றம் ஆகியவைகளைக்கொண்டு கால்வரையறை செய்திருக்கின்றனர்.

### காலவளவை

| | | |
|---|---|---|
| 60 நொடி | — | 1 விநாடி |
| 60 விநாடி | — | 1 நாழிகை |
| $7\frac{1}{2}$ நாழிகை | — | 1 சாமம் |
| 8 சாமம் | — | 1 நாள் |
| 7 நாள் | — | 1 கிழமை (வாரம்) |
| 15 நாள் | — | 1 பக்கம் (வளர்பிறை அல்லது தேய்பிறை) |
| 2 பக்கம் | — | 1 திங்கள் |
| 6 திங்கள் | — | 1 மாற்றம் |
| 2 மாற்றம் | — | 1 ஆண்டு |

பண்டைத் தமிழ்ப்பெருமக்கள் எண்ணல் எடுத்தல், முகத்தல், நீட்டல், காலக்கணித்தல் போன்ற அளவைகளை எவ்வளவு நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்து வழிவழியாக வளர்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை அளவையின் கூறுபாடுகளைக் கொண்டு நாம் ஒருவாறு உய்த்துணரலாம். மேலும் அவர்கள் இயற்கையோடு இயைந்து வளர்ந்துவந்தவர்கள் என்பதை அளவைகளுக்கு அவர்கள் இட்டிருக்கும் பெயர்களைக் கொண்டே அறிந்து கொள்ளலாம். இந்தத் துறைகளிலெல்லாம் தமிழகத்தில் வளர்ந்து வந்த அறிவியல் அறிவு இடைக்காலத்தில் வந்து, தேங்கி மங்கி, மறைந்துவிட்டது! மறைந்த தமிழ் அறிவு மீண்டும் மலர்ச்சிபெற்று, உலகநாடுகளை மீறுவிட்டாலும் அவையோடு ஒத்து உயர்ந்து நிற்கும் நிலையையாவது பெறவேண்டாமா? அதற்கு ஆவன காணும் வகையில் தமிழ்ப்பெருமக்கள் முனைவார்களாக!

[இது ஆராய்ச்சி வல்லுநர் பேராசிரியர் தோழர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுதிய 'அளவைகள்' என்னும் கட்டுரையை அடிப்படையாகக்கொண்டு வரையப்பட்டதாகும்.]

## திராவிட சாத்திரி!

தோழர் வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் பார்ப்பன குலத்தில் பிறந்த தமிழ்ப் பெரும்புலவராவார். அவர் தமிழினிடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டிருந்த காரணத்தால், தம்முடைய பெயர் வடமொழியில் அமைந்திருப்பதற்காக வெட்கப்பட்டு, அதனைத் தூய தமிழ்ப் பெயராக மாற்றிக்கொள்ள வேட்கை கொண்டு **பரிதிமாற்கலைஞன்** என்று மாற்றிக்கொண்டார்.

அவர் ஆரிய மொழி—நாகரிகத்தைக்காட்டிலும் தமிழ் மொழி—நாகரிகத்தை மிகவாகப் போற்றிப் புகழ்ந்து மதித்து வந்தார். அதுமட்டுமல்லாமல் தமிழ்த் தனித்தியங்கவல்ல தனிப்பெரும் மொழி என்பதையும் வலியுறுத்திவந்தார். ஆரிய பார்ப்பன குலத்தில் பிறந்தவர்களில் இப்படிப்பட்ட ஒருவரைக் காணுவது அரிதாக இருந்த காரணத்தாலும், திராவிட மொழி—நாகரிகத்தை மிகவும் போற்றுபவராக இருந்த காரணத்தாலும் காலஞ்சென்ற தமிழ்ப்பெரும் புலவர் தோழர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் தோழர் பரிதிமாற்கலைஞரை திராவிட சாத்திரி என்று அழைப்பாராம். இச்செய்தியைத் தோழர் பரிதிமாற்கலைஞர் அவர்களே தோழர் தாமோதரம் பிள்ளை அவர்களைப்பற்றி எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.



# குயில் கூர்த்த கூர்ப்பு

[எழினி]

அழகில் மிக்க இள நங்கையை மணம்புரிந்து கொண்ட, ஆற்றலில் மிக்க அவ்விளம் நம்பி "உன்னைவிட்டு என்றும் பிரியேன்; இன்று போல் என்றும் உன்னோடு உறைவேன்" என்று வாக்குறுதி அளிக்கிறான். தலைவன் செலுத்தும் அன்பிலேயும் அவன் காட்டும் ஆதரவிலேயும் தலைவி திளைத்து மகிழ்ந்திருக்கிறாள்.

நாட்கள் பல கழிகின்றன; அவர்களது இன்பவாழ்வு இனிது நடந்தேறி வருகின்றது. தலைவனும் தலைவியும் வரவுக்கு வழிகாணாமல் செலவு செய்வதிலேயே வாழ்க்கையை ஈடுபடுத்தியிருத்தலால், ஏற்கனவே ஈட்டிவைத்திருந்த பொருள் சிறிதுசிறிதாகக் குறைந்து இல்லாமையை நோக்கி நடக்க ஆரம்பித்தது. இல்லற வாழ்வை இனிது நடத்தப் பொருள் மிகமிகத் தேவை என்பதைத் தலைவன் நன்கு உணர்ந்தவனாதலால், பொருள் குறைந்து வருவதைக் கண்டு கவலைகொள்கிறான். மீண்டும் பொருள் தேடுவதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று எண்ணங்கொள்கிறான்.

இல்லற வாழ்வில் காதலின் சிறப்பியல்பு தலைவியின் பக்கமும், கடமையின் சிறப்பியல்பு தலைவனின் பக்கமும் அமைந்திருக்கின்றன. தலைவியை உடனிருந்து ஆதரவுதந்து காப்பாற்றவேண்டியது தலைவனின் இன்றியமையாக் கடமைகளில் தலைசிறந்த கடமையாக இருக்கின்றது. அந்தத் தலையாய கடமையை நிறைவேற்ற, தலைவன் பலவாய துணைக் கடமைகளை நிறைவேற்றவேண்டியவனாக இருக்கிறான். பொருள் தேடுதல் என்பது அந்தத் துணைக் கடமைகளில் ஒன்றாகும். தலைவியோடவே இருந்து இல்லறக் கடமையை நிறைவேற்றுவதா அல்லது தலைவியை விட்டுப் பிரிந்துபோய்ப் பொருள் தேடுதலாகிய கடமையை நிறைவேற்றுவதா என்று ஏதும் புரியாமல் தலைவன் தத்தளித்துக்கொண்டிருக்கிறான். அவன் இப்படியாகப் பொருள் தேடும் பயணத்தை ஒத்திப்போட்டுக் கொண்டே இருக்கிறான். பொருளின் இருப்பு மிகவும் குறைந்துவிடவே, இனியும் காலந் தாழ்த்தல் ஆகாது, காலந்தாழ்த்தினால் இல்லறத்தை இனிது நடத்தமுடியாமல் வறுமைப் படுகுழியில் வீழ்ந்து அல்லற்படவேண்டி ஏற்படுவதோடு இழிநிலையையும் எய்தவேண்டி வரும் என்றெல்லாம் எண்ணித் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்துபோகிறான்.

தலைவன் புறப்படுவதற்கும் இளவேனிற் காலம் வருவதற்கும் பொருத்தம் சரியாக இருந்தது. "உன்னை விட்டுப் பிரியேன்" என்று வாக்குறுதி அளித்த தலைவர் பிரிந்துவிட்டாரே என்ற வருத்தமும், அதுவும் காதலின்பம் இனிமையாக நுகருவதற்கேற்ற இளவேனிற்காலத்தில் போய்விட்டாரே என்ற துயரமும், தன்னைவிடப் பொருளே பெரிது என்று கருதிப் போய்விட்டாரே என்ற துக்கமும் தலைவியைச் சோர்வடையச் செய்துவிடுகின்றன. தலைவி ஒளியிழந்து, பொலிவழிந்து, வருத்தமே உருவாய்ச் சோர்வுற்று வீற்றிருக்கிறாள். தலைவன் செல்லும் வழிநெடுக இளவேனிற்காட்சிகள் எப்படியெல்லாம் காணப்படும் என்பதை நினைந்து மனம் உருகுகிறாள். மலைப்பாங்கான இடம்; தேன் சொட்டும் அடைகள் பொருந்திய மலைச்சாரல்; கருங்கற்களிடையே துருவிக்கொண்டு ஓடிவரும் அருவி; அதனையொட்டித் தூய்மையாகக் காணப்படும் மணல் அடுத்த கரை; அந்தக் கரையின் கண்ணே தளிர்த்துத் தழைத்த நறுமணங் கமழும் வடுக்களோடு கூடிய மாமரங்கள்;

அந்த மாமரக் கிளைகளிலே தங்கிப் பாடி மகிழும் கருங்குயில்கள்; இவற்றிற்கிடையே நடந்துசெல்லும் தலைவன்! ஆகிய இத்தகைய காட்சிகள் தலைவியின் உள்ளத்தில் பலப்பல நினைவுகளை எழுப்புகின்றன; அவள் ஏக்கங் கொள்கிறாள், வருந்துகிறாள். அந்த நேரத்தில் தலைவியைக்காண தோழிவருகிறாள்.

**தோழி :** "ஏன் சோர்வுற்று உட்கார்ந்திருக்கிறாய்? உன் உடம்புக்கு என்ன?"

**தலைவி :** "உடம்புக்கு ஒன்றுமில்லை!......"

**தோழி :** "பின் ஏன் சோர்வோடு காணப்படுகிறாய்?"

**தலைவி :** "அவர் பொருள்தேடப் போய்விட்டார்! எனக்கு ஒரே வருத்தமாக இருக்கிறது; எனவே சோர்வாக உட்கார்ந்திருக்கிறேன்!"

**தோழி :** "அவர் அவரது கடமையைச் செய்யத்தானே போயிருக்கிறார்! அதற்காக நீ ஏன் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாய்?"

**தலைவி :** "கடமையைச் செய்வதற்கும் காலம் இல்லையா? எந்த எந்தக் கடமைகளை எந்த எந்தக் காலத்தில் செய்யவேண்டும் என்பதற்கு ஒரு வரைமுறையே கிடையாதா?"

**தோழி :** "முன்பு சேர்த்துக் கொண்டுவந்து வைத்திருந்த பொருள் இப்பொழுது குறைந்துவிட்டது; பொருள் குறைந்து

குறைந்துவிட்டது; பொருள் குறைந்து

கொண்டேபோய் ஒன்றுமேயில்லாமற் போய்விட்டால் பிறகு இல்லறம் எப்படி ஈடேறும்? இல்லறத்தை இனிது நடத்த வேண்டிதானே பொருள் தேடப் போயிருக்கிறார்? இதில் தவறு ஒன்றுமில்லையே!"

**தலைவி :** "தவறு ஒன்றுமில்லையா? ஏன் தவறில்லை? அண்டினவரைக் கைவிடமாட்டேன் என்று அன்று கூறிய வாக்குறுதியை மறந்துவிட்டு, இப்பொழுது பொருள் தேட என்னைவிட்டுப் பிரிந்து செல்வது அறச் செயலாகுமா? அதுவும் காதலன் காதலியர் கூடி மகிழத்தக்க இளவேனிற் காலத்தில் பிரிந்து செல்வது முறையாகுமா? இளவேனிற் காலத்தில் என்னைப் பாதுகாக்கவேண்டியது அவரது கடமையா? அல்லது பொருள் மேற்செல்வது அவரது கடமையா? என்னைக்காட்டிலும் பொருள் அவருக்கு அரியதாக ஆகிவிட்டது போலும்! இது வியப்பாகத்தானிருக்கிறது!"

**தோழி :** "அவர் பிரிவதற்கு முன்னே நீ உன்னுடைய நிலைமையை எடுத்துக்கூறி அவரைத் தடுத்து நிறுத்தியிருக்கலாமே!"

**தலைவி :** "நான் என்னால் முடிந்தமட்டும் எவ்வளவோ எடுத்துக் கூறினேன். அவர் பொருள்மீது நீங்கா விருப்புக்கொண்டிருந்ததால், என்னுடைய சொற்கள் அவர் செவிகளில் ஏறவில்லை! ஆனால் அவர் செல்லும் வழியில் மாமரக்கிளைகளில் தங்கும் குயில்கள்தாம் அவருக்கு அறிவுரை கூறவேண்டும்!"

**தோழி** , "குயில்கள் எப்படியடி நமக்கு அறிவுரை கூறும்?"

**தலைவி :** ஏன் கூறா? கூறத்தானே செய்கின்றன! அவருக்குக்கூட உறுதியாகக் கூறத்தானே செய்யும்!

**தோழி :** "என்னடி கூறும்?"

**தலைவி :** "அவர் வழிநெடுகப் போய்க்கொண்டிருப்பார். அங்கு அருவியை ஒட்டி, மணலடுத்த கரையின் கண்ணே, வளர்ந்தோங்கித் தளிர்த்துத் தழைத்துக்காணப்படும் மாமரக்கிளையில் குயில்கள் இணைபிரியாமல் சேர்ந்து இருக்கும். அவை நமது தலைவரைப் பார்த்து 'ஏ! அறிவுடையவரே! சூதாடும் கருவி எப்படி நிலையில்லாமல் மாறிமாறி விழுமோ, அப்படிப்பட்டதுதான் நிலையில்லாத் தன்மையைக்கொண்ட பொருளீட்டும் வாழ்க்கை

மையக்கொண்ட பொருளீட்டும் வாழ்க்கை

யும். அந்த வாழ்க்கையை ஏதுவாகக் கொண்டு நீர் உம்முடைய காதலியை விட்டுப் பிரியாதீர், எப்பொழுதும் காதலியோடு கலந்தே இருப்பீர்!' என்று கூவுதலின் மூலம் இடித்துரைத்துத், தாம் ஆணும் பெண்ணுமாகக் கலந்து வாழும் தன்மையை அவருக்கு உணர்த்திக் கொண்டு இருக்கும்."

**தோழி :** "குயில்கள் உனக்கு வேண்டிய இந்தக் குறிப்புகளைத்தான் உணர்த்திக்கொண்டிருக்கின்றனவா?"

**தலைவி :** "ஆமாம்! அதிலென்ன ஐயப்பாடு!"

தோழி தலைவியின் பிரிவாற்றாத நிலை கண்டு பெரிதும் இரங்குகிறாள். தலைவிக்குப் பலவுகளாலும் ஆறுதல் கூறி அவளைத் தேற்றத் தோழி முற்படுகிறாள்.

ஃ ஃ ஃ

இது காமக்கணிப்பசலையார் என்னும் பெண்பாற்புலவர் பாடிய நற்றிணை 243-ம் செய்யுளின் உட்கருத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்த சொல்லோவியமாகும்.

**தேம்படு சிலம்பில் தெள்ளறல் தழீஇய**
**துறுகல் அயல தூமணல் அடைகரை**
**அலங்குசினை பொதுளிய நறுவடி மாஅத்துப்**
**பொதும்புதோ றல்கும் பூங்கண் இருங்குயில்**
**கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு**
**அகறல் ஓம்புமின் அறிவுடை யீரெனக்**
**கையறத் துறப்போர்க் கழறுவ போல**
**மெய்யுற இருந்து மேவர நுவல**
**இன்னா தாகிய காலைப் பொருள்வயின்**
**பிரிதல் ஆடவர்க்கு இயல்பெனின்**
**அரிதுமன் றம்ம அலத்தினும் பொருளே**

[நற்றிணை—243]

[பொழிப்புரை : தேன் உண்டாகின்ற சாரல் மலையிலே தெளிந்த நீர்சூழ்ந்த கருங்கல்லின் அயலிலுள்ள தூய மணலடுத்த கரையின் கண்ணே அசைகின்ற கிளைகளிலே தளிர்த்துத் தழைத்த நறியவடுக்களையுடைய மாமரமிக்க சோலைதோறும் தங்குதல்கொண்ட சிவந்த கண்ணுடைய கரிய குயில்கள் "சூதாடு கருவி வீழ்ந்து விழுமாறுபோன்ற நிலையில்லாத பொருளீட்டும் வாழ்க்கையை ஏதுவாகக்கொண்டு அறிவுடையீர்! நீங்கள் உம்முடைய காதலிமாரை விட்டுப் பிரியாது கலந்தேயிருங்கள்" என்று காதலியர் செயலற்றுப்போகும்படி கைவிட்டுத் துறந்துசெல்வோரை இடித்துரைப்பனபோலத் தாம்தாம் ஆணும் பெண்ணும் மெய்யொடு மெய்சேர இருந்து பொருத்தமாகக் கூவிக்கொண்டிருக்கப், பிரியும்பொழுதே துன்பத்தைத் தருவதாகிய இளவேனிற்காலத்துப் பொருள்தேடும் பொருட்டுப் பிரிவது ஆடவர்க்கு இயல்பானவொரு பண்பு என்று கூறினால் தன்னைச்சேர்ந்தவரைக் கைவிடமாட்டேன் என்று கூறிப் பாதுகாக்கும் அறத்தினைக்காட்டிலும் தெளிவாகப் பொருள் அரியதுபோலும்? இது மிக்க வியப்பாகும். சிலம்பின் – பக்கமலையிலே; அறல் - நீர்; அலங்கு - அசைகின்ற; பொதும்பு – சோலை, மாத்து - மாமரம்; கவறு - சூதாடுகருவி; இரு–கரிய.]

இளவேனிற்காலத்து இயற்கையழகைப் [illegible] இச்செய்யுளில் விளக்கிக்காட்டியிருக்கும் தன்மை நெஞ்சை அள்ளுவதாகும். இளவேனிற் காலத்துக் குயில்கள் கூவுவது தலைவனுக்கு அறிவுரை கூறுவதாகும் என்று கொண்டு தலைவி தன் கருத்துக்களைக் குயிலின் மேல் ஏற்றிக் கூறும் பாங்கு எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியதாகும்.

காதலியர் எப்பொழுதும் காதலன்மார்களைத் தம் பக்கத்தில் இருத்திவைத்துக் கொண்டிருப்பதையே பெரிதும் விரும்புவர் என்பதையும், காதலன்மார்கள் பிரிந்து செல்வதை, அது எவ்வளவு முக்கியமானவொரு செயலாக இருந்தபோதிலும், விரும்பமாட்டார் என்பதையும், பிரிவாற்றுமையைத் தாங்குவது என்பது பெண்களுக்கு இயலாத தாரு செயலாகும் என்பதையும் காமக்கணிப்பசலையார் மிகத் திறம்படவும், நயம்படவும் இச்செய்யுளில் விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

சூதாடுங்கருவியை நம்பி வாழ்வது எப்படி [illegible] பொருளீட்டும் நிலையற்றதோ அப்படியே [illegible] வாழ்க்கையை நம்பி வாழ்வதும் என்று நிலையில்லாப் பொருளுக்குச் சூதாடுங் கருவியை உவமையாக்கியிருப்பது போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

பொருளைக் காட்டிலும், தன் காதலியைக் காப்பாற்றும் கடமையே பெரிது என்பது இச்செய்யுளால் நிலைநாட்டப்படுகிறது. கடமைகளைக் காலமறிந்து ஏற்றவாறு செய்யவேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

குயில் குறித்த குறிப்பாகத் தலைவியால் சுட்டிக்காட்டப்படும் கருத்து ஆடவரால் போற்றிக் காப்பாற்றப்படவேண்டிய அருங்கருத்தாகும். தலைவனைப் பிரிந்து மனமயங்கிக் கிடக்கும் தலைவி, குயில் கூறுவதாக எண்ணிக் கலங்குவது இயற்கைதானே !

# காணிக்கை!

[இரா. செழியன்]

(துரோணரின் பர்ணசாலை. துரோணரின் மகன் அசுவத்தாமா உட்கார்ந்து வேதம் படிக்கிருன்.)

**அசுவத்தாமா :** (வேதம் படித்தல்) "யத்ர ப்ரஹ்ம சக்ஷத்ரம் சஸம்யஞ்சௌசரத : ஸஹ தம் லோகம் புண்யம் யஜ்ஞேஷம் யத்ரதேவா: ஸஹாக்நிஞ".

(தட்டுத் தடுமாறி இந்த ஸ்லோகத்தை அசுவத்தாமா படித்து முடிக்கிருன். பின் அலுத்துக்கொண்டு எழுந்து நிற்கிருன்.)

**அசு :** என்னடா, இழவு! உருப்போடுவதற்குள் மண்டை உடைந்துவிடும்போலிருக்கிறது! (தலையில் குட்டிக்கொள்ளுகிருன், குடுமியைத் தட்டி முடிந்துகொள்ளுகிருன்.)

(துரோணர் உள் நுழைகிருர், ஓரத்தில் நின்று மகன் பேசுவதைக் கேட்கிருர்.)

**அசு :** ஊரிலெல்லாம் பையன்கள் ஓடியாடி விளையாடுருனுவ! நான் பாவிப் பிராமணப் பையன் இங்கே வேதத்தை வச்சுண்டு மாறடிக்கிறேன்! உம்! நமக்கு வாய்ச்ச அப்பன், பிரம்மாவைத்தான் கேட்கணும்! எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஓய்வு ஒழிவு, விளையாட்டு, வேடிக்கை, உம், ஒன்னுங்கிடையாது. ஒரு நாளைக்காவது அவர் என்னைக் கூப்பிட்டு 'டேய்! அசுவத்தாமா! நீயும் போய்க் கொஞ்சநாழி விளையாண்டு வா!' என்று ஏன் அனுப்பப்படாது? காலையில் எழுந்து கடாமுடான்னு வேதபாராயணம் பண்ணணும், அப்புறம் வில்லை எடுத்து வளைக்கணும்! என்ன பாவம் செய்தேனே! இங்கே......

**துரோணர் :** டேய், என்னடா?

**அசு :** (திடுக்கிட்டு) ஒன்றுமில்லை, வேதம் படிச்சுண்டு இருக்கேன். (ஓடிப்போய் உட்கார்ந்து) யத்ர ப்ரஹ்ம சக்ஷத்ரம்...

**துரோ :** நிறுத்துடா! நீ சொல்லிக்கொண்டிரு ததெல்லாம் என்காதில் நன்ருவிழுந்தது திட்றதையெல்லாம் திட்டிவிட்டுப் பி அது வேதம் என்கிறியே! இங் நீ வேதபாராயணம் செய்கிறதைக் கே டால், சதுர்வேதங்களும் கடலில் போ விழுந்துவிடும்! நீ பாராயணம் செய்யற கொஞ்சங்கூட நன்ருயில்லை, போ! ஏதே தஸ்யுக்கள் கத்தறது மாதிரி இருக்கு!

**அசு :** ஏனப்பா! நான் பாராயணம் செய்வதி என்ன குத்தம்?

**துரோ ;** அதிலே பாவம் இல்லை!

**அசு :** என்ன, என்ன?

**துரோ :** பாவம்! படிக்கிறதில் பாவம் வரணு

**அசு :** வேதம் படிச்சா பாவம் வரணுமா பாவம் போவனும்னுதானே வேதம் படி கிருேம்.

**துரோ :** அட பாவமே! நான் சொல்றது, படி கிறப்போ பாவம்! பாவம் வர்ரனும்! ம ஸுக்கு ஹிதமா இருக்கனும்! நீ படிக் றது மனஸுக்கு வதமா இருக்கு! இதே பார் நான் படிச்சுக் காட்றேன். "யத் ப்ரஹ்ம சக்ஷத்ரம் சஸம்யஞ்சௌசரத ஸஹ தம்லோகம் புண்யம் யஜ்ஞேஷ யத்ரதேவா : ஸஹாக்நிஞ".

(துரோணர் நிறுத்திப் படித்துக் கா டுகிருர்.)

**துரோ :** இப்படிடா வேதபாராயணம் செய் ணும்! இப்போ, இந்த ஸ்லோகம் புரி சுதோ?

**அசு :** புரிஞ்சுது!

**துரோ :** அதற்கு அர்த்தம் என்ன?

**அசு :** தெரியாது.

**துரோ :** என்னடா, அசுவத்தாமா! முதலி புரிஞ்சுதுன்னு சொன்னே, பின் அர் தம் தெரியாதுன்னு சொல்றியே!

அசு : ஆமாம்! வேதம் புரிஞ்சுது, ஆனல் அர்த்தம் தெரியாது! நீங்கள்தானே அர்த்தம் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், நன்னு புரிஞ்சமாதிரி வேதஸ்லோகங்களைச் சொல்லனும் என்று சொன்னேள்.

துரோ : அந்தப் பாடத்தை என்னிடமே செய்து காட்டுறியா? அப்படிப்படாது. துரோணுச்சாரியின் மகன் அசுவத்தாமா சகல வேதங்களையும் கரைத்துக்குடித்தவன் என்கிற பேர் எடுக்கணும்! இந்த ஸ்லோகத்துக்கு என்ன அர்த்தம் தெரியுமோ?

அதாவது எந்த இடத்தில் பிராமணர்களும் க்ஷத்திரிய அரசனும் ஒற்றுமையுடன், ஆட்சி புரிகின்ருர்களோ, அத்துடன் வைசிய சூத்திரர்களின் பெயர் வெளிவருகிறதில்லையோ அத்தேசம் யாகத்திற்குரிய பரிசுத்தமான தேசம் என்று நினைக்கிறேன் என்பதாகும். ஒன்றைப் பரிசுத்தமான தேசமென்று சொல்வதற்கு லட்சணங்கள் எவையெவை என்று யஜுர் வேதம் இப்படிச் சொல்லுகிறது. அந்த தேசத்தில் பிராமணர்களும் அரசனும் ஒற்றுமையாக ஆட்சி செலுத்தனும், வைசிய சூத்ரர்களின் பெயர்கள் எந்தவகையிலும் வெளிவரக்கூடாது! இது ஒரு நல்ல நாட்டுக்கு லட்சணம். என்னடா புரிஞ்சுதா!

அசு : புரியறது......!

துரோ : என்னடா, இழுத்தாப்போலே பேசுறியே!

அசு : இல்லே பாருங்கோ! வேதப்படி நம்ம தொழில், ஓதல், ஓதுவித்தல் முதலான ஆறு தொழில்களும்......

துரோ : ஆமாம் அதைவிட்டு, அரசகாரியங்களில் நாம் ஏன் நுழையனும் என்று கேட்கிறியோ?

அசு : ஆமாம் பிதாவே!

துரோ : வேதமுறைப்படி நமக்கு ஆறு தொழில்கள் தான். அத்தோடு நின்ருல் உலகம் சரிவர நடக்காது. மற்ற வர்ணத்தாரும் சரியாக இருக்கிருர்களா என்று நாம் பார்த்துக்கோணும். இதோபார்! க்ஷத்திரியன் நாட்டுக்கு அரசன். அவன் வீரனுக இருப்பான், ரணகளத்தில் சூரனுக இருப்பான். ஆனல் ராஜ்யத்தை நடத்த வீரமும் சூரத்தனமும் மட்டும் இருந்தால் போதாது. கொஞ்சம் மூளை வேண்டும். அது நம்மளவாளுக்கு மட்டும்தான் இருக்கிறது என்பது பிரசித்தம். க்ஷத்திரியன் அரசனுக இருந்தாலும், பிராமணாள் பக்கத்தில் இருந்து எது நீதி, எது குலதர்மம், எது வேதமுறை, எது தெய்வப்பிரிதி என்று வகுத்துச் சொல்லி அரசாங்கத்தை நடத்தவேண்டும். அதைத்தான் யஜுர் வேதம் சொல்லுகிறது 'ப்ரஹ்ம சக்ஷத்ரம் சஸம்யஞ்சௌசரத:' பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் ஒற்றுமையாக ஆளவேண்டும். ஆட்சி நிருவாகத்தில் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் இருவருக்கும் பங்கு உண்டு, இதருள் வரலாமாவென்ருல் கூடவே கூடாது. அவாளுக்கு ஞானம் கிடையாது, சாஸ்திர சம்பிரதாயங்கள் தெரியாது, வேதத்தின்படி உரிமையும் இல்லே. அதனுல்தான் வேதஸ்லோகம் நன்னுச் சொல்லுது, நல்லதொரு தேசத்தில் வைசிய சூத்திரர்கள் இருக்கிருர்கள் என்பதே தெரியக்கூடாது. ராஜ்யமென்ருல் நம்மைப்போன்ற ஆச்சாரியார் ஒருவர் மந்திரியாக, இராஜகுருவாக இருக்கவேண்டும். மற்றவாள் உயர்ந்த பதவிகளுக்கு வரப்படாது. இது வேதவாக்கு!

அசு : நம்மளவாள் பெயர்மட்டும் பிரசித்தமாக வேண்டும். வைசிய சூத்திராள் பெயரே தெரியக்கூடாது! வேதம் நல்லாதான் இருக்கு, பிதாவே!

துரோ : இன்னும் பாருடா! நமமளவாள் இல்லாம அவர்களால் ஒரு காரியமும் முடியாது என்பதற்கு மற்ருெரு உதாரணம். நான் யாருடா? குலத்தில் பிராமணன், பெயர் துரோணுச்சாரியார். என்னுடைய குருகுலத்தில் இருப்பவர்களெல்லாம் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் க்ஷத்திரியர்கள். வில்லேப் பிடிப்பது க்ஷத்திரியர்களுடைய வேலே. ஆனல் அந்த வேலையைக் கற்றுக்கொள்ள, அந்த க்ஷத்திரியர்கள் என்னைப்போன்ற பிராமணனிடம்தான் வரவேண்டியிருக்கிறது. யோசித்துப்பார்! க்ஷத்திரியர்களில் ஆயிரம் வில் வீரர்கள் இருந்தாலும், குரு என்று வரும்பொழுது துரோணுச்சாரியார் ஒருவர்தான் இருக்கிருர். நம்மளவாளுக்குத்தான் அந்த ஞானம், சம்பிரதாயம் தெரியும். துரோணுச்சாரியார் வேத சாஸ்திரங்களையும் படிக்கணும், அத்துடன் தனுர் சாஸ்திரத்தையும் தெரிந்திருக்கவேண்டும். ஆனல் வேத பாடசாலே வைக்காமல், வில்வித்தை குருகுலம் ஏன் நான் வைத்தேன் என்று யோசிக்கிருயா?

அசு : என் மனதில் வந்த சந்தேகத்தை நீங்கள் எப்படியோ தெரிந்துகொண்டீர்கள்!

துரோ : உன் முகத்தைப் பார்த்தாலே, நன்றாத் தெரியுதே! வேத பாடசாலை வைத்திருந்தால், பிராமணப் பசங்களெல்லாம் வந்து, குய்யோ முறையோன்னு கூவிக்கொண்டிருப்பார்! ஆனால் வில்வித்தைக்குப் பாடசாலை வைத்ததும் ராஜகுமாரர்கள் நம்மிடம் வருகிறார்கள். இப்பொழுது நம்மிடம் யாரார் பாடத்துக்கு வருகிறார்கள்?

அசு : பாண்டவர்கள் கௌரவர்கள் இரண்டு அரசகுடும்பத்தார்களும்!

துரோ : இதோ பாருடா! இரண்டு அரசகுடும்பத்தார்களும் வில்வித்தைக்கு நம்மிடம் வருகிறார்கள். நாளைக்கு யார் பட்டத்துக்குவந்தாலும், நம்மபாடு யோகந்தான்! நீயும் எல்லோரிடமும் நல்லவனாக நடந்து கொள்!

அசு : எனக்கும் ஒரு மந்திரி பதவி கிடைக்கும். (மகிழ்கிறான்.)

துரோ : மேலே பார்த்தது போதும். போய் வில்லை எடுத்துக் கொஞ்சநாழி லாவகம் பயில்!

அசு : அதற்கு வேதமே படித்துக்கொண்டிருக்கலாம்போலிருக்கிறதே! வில்லை வளைத்து, உடலை வளைப்பதென்றால்.

துரோ : சிரமமாயிருக்கிறதோ! வேதமும் படிக்கணும் அதோடே வில்வித்தையும் பயிலணும், நான்தான் முதலில் சொன்னேனே, நம்மளவாள் ஆத்மார்த்தத் துறையை விட்டுவிடக்கூடாது, அத்தோடே அரசாங்கத்தில் பதவி என்றால் தயாராக முதலில் இருக்கவேண்டும். போடா!

(அசுவத்தாமன் போகிறான். அர்ச்சுனன் வருகிறான்.)

(அருச்சுனன் தனது உத்தரியத்திலிருந்து இரண்டு மாம்பழங்களை எடுத்துவைக்கிறான்.)

துரோ : என்னடா, பார்த்திபா! இது?

அருச்சுனன் : மாம்பழம், ஸ்வாமி! கிருஷ்ண மாமா துவாரகையிலிருந்து அனுப்பி வைத்தார்கள். அரண்மனையில் கூடையைப் பிரித்ததும்; உங்கள் ஞாபகம் அடியேனுக்கு வந்தது. மாம்பழமென்றால் உங்களுக்கு மகாப்பிரியம் என்பது எனக்குத் தெரியும்! உடனே கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு ஓடோடியும் வந்தேன்!

துரோ : மெத்த சந்தோஷம்! குருவைப்பற்றிய அக்கறை உனக்கு நிரம்ப இருக்கிறது!

அரு : இன்னொன்று, யசோதைப்பாட்டி நான் குப் பசுமாடுகளை ஓட்டி அனுப்பித்திருக்கிறாளாம். இன்னும் இரண்டு நாட்களுக்குள் வந்து சேரும் என்று மாம்பழம் கொண்டுவந்தவன் சொன்னான். உடனே நான், குருவுக்கு ஒரு பசுமாடு கொடுக்க வேண்டும் என்று பீஷ்ம அப்பாவிடம் சொன்னேன் ஆகட்டும் என்றார். பசு மாடு வந்ததும், இங்கே கொண்டுவந்து கட்டிவிடுகிறேன். பசுவென்றால் சாதாரணப் பசுவல்ல, ஒவ்வொன்றும் வேளைக்கு மூன்று படி பால் கறக்கும்.

துரோ : பசு வேண்டியதுதான். ஆனால் வைத்துப் பாராமரிப்பது எப்படி?

அரு : அதைப்பற்றி கவலைப்படவேண்டாம் குருஜி! மாடுகளை அடக்குவதில் நகுலனுக்கு நல்ல பழக்கமுண்டு. மேலும் கௌரவர்கள் நூறு பேர்கள் இங்கு வருகிறார்களே, என்ன செய்கிறார்கள்? அவர்களில் நான்குபேரைப் பிடித்து மாட்டுக் கொட்டில் வேலையைப் பார்க்கச் சொல்லி விடலாம்! உங்களுக்கு ஒரு கவலையும் வேண்டாம்!

துரோ : அருச்சுனா! உன் குருபக்தியை மெச்சி னேம்! உனக்குச் சகலகலைகளும் வளர் தாக!

அரு : ஸ்வாமி!

துரோ : என்னடா?

அரு : அஸ்திரப்பிரயோகத்தில், ஷட்சரப்பி யோகம் என்று ஒன்று இருக்கிறதாமே!

துரோ : உனக்கெப்படியடா, அது தெரிந்தது அதன் அர்த்தமே மிகப்பலருக்குத் தெ யாதே!

அரு : அர்த்தம் தெரிகிறது. ஷட்சரப்பிரயோ கம் என்றால், ஏழு அம்புகளை எய்வத என்பதாகும். ஒரே சமயத்தில், ஒ பொருளின்மீது ஏழு அம்புகளை எய தென்றால் சாமான்யமானதல்ல. வி வித்தையில் மிக உயர்ந்ததென்று பெ யோர்கள் அதைப்பற்றிக் கூறக் கே டிருக்கிறேன். ஆனால் அந்த வித்தை நன்கு தெரிந்தவர்கள் பூவுலகில் வே யாரும் கிடையாதாம். தனுர் சாஸ்திர தில் முழு ஞானஸ்தராக விளங்கிடும் த ளுக்கு மட்டும் அது தெரியுமாம். மற

வித்தைகளை யெல்லாம் கற்றுத்தந்த நீங்கள் இதையும் எனக்குச் சொல்லித்தர வேண்டுகிறேன்.

துரோ : அந்த வித்தை எனக்குத் தெரிந்திருந்தது உண்மைதான். ஆனல் பழக்கத்தில்லாததால் இப்பொழுது ஞாபகத்தில்லை, மறந்துவிட்டேன்.

அரு : ஸ்வாமி! அந்த அபூர்வ வித்தையைச் சொல்லித்தரமுடியாது என்று வேண்டுமானல் கூறுங்கள். மறந்துவிட்டேன் என்றுமட்டும் கூருதீர்கள்! நீங்களோ ரிஷி ஸ்ரேஷ்டர், சகலகலா ஞானஸ்தர், சதுர் வேதங்களையும் தவறின்றி ஞாபகத்தில் வைத்திருப்பவர்! உங்களுக்கு சாஸ்திரம், கலைகளில் தெரியாதது ஒன்றும் கிடையாது; தெரிந்து மறந்தது என்றும் ஒன்று இருக்கமுடியாது. ஆதலால் அந்த அபூர்வ அஸ்திரப்பிரயோகத்தை எனக்கு நீங்கள் அவசியம் கற்றுக்கொடுக்க வேண்டும்.

துரோ : உன்னுடைய சாதுர்யத்தையும், வில்வித்தையைப் பூரணமாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தையும் கண்டு நாம் மெச்சினேம். உனக்கு அந்த வில்வித்தையைக் கற்றுத்தருகிறேன். நாளைய தினம் வா! பார்க்கலாம்!

அரு : குருவே! இன்று சுபதினம். மேலும் நாளையதினம் பசுமாடு வந்துவிடும். அந்தப் பசுமாட்டைக் கொண்டுவந்து, இங்கே கட்டி, அதற்குக் கொட்டில் போடும் வேலை எல்லாம் இருக்கும். நாளைக்கு எனக்கு ஒழிவிருக்காது. ஆதலால் இன்றைக்கே அந்த வித்தையைக் கற்றுத்தாருங்கள். நாளையதினம் பசுமாட்டைக் கொண்டுவந்து சேர்க்கும் வேலையை நான் கவனித்துக்கொள்வேன்.

துரோ : அதுவும் சரிதான். இன்றைக்கே அதை உனக்குக் கற்றுத்தருகிறேன். ஆனல் ஒன்று, அந்த அபூர்வ வில்வித்தையை இதுவரை நான் வேறு யாருக்கும் சொல்லித்தந்ததில்லை, இனிமேல் சொல்லித்தரப்போவதுமில்லை. உனக்கு மட்டும்தான் சொல்லித்தரப்போகிறேன். நீ பிறருக்குத் தெரியாமல் அதைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

அரு : அதே விஞ்ஞாபத்தைத்தான் நானும் தங்களிடம் வெளியிட இருந்தேன். என்னைத்தவிர வேறுயாரும் அந்த வில்வித்தையைத் தெரிந்தவர்களாக இருக்கக் கூடாது. வாருங்கள் குருஜி! தோட்டத்தில்போய் ஏகாந்தமாக அந்தப் பாடத்தைக் கவனிக்கலாம்! சற்று இருங்கள் சனியன்போலக் கர்ணன் அதோ! வருகிருன், அவன் முதலில் போகட்டும்.

துரோ : ஏன் அருச்சுனா! உனக்குக் கர்ணனைக் கண்டால் பிடிப்பதில்லை.

அரு : அவனெப்படி அரசகுமாரர்களாகிய எங்களுடன் சமமாக வில்வித்தைக் கற்றுக் கொள்ள வருவது!

துரோ : போகிருன்! துரியோதனன் தயவால் அவன் இங்கு சேர்ந்திருக்கிருன். ஏதோ கெட்டிக்காரப் பையன் உனக்கு. அடுத்தபடி வில்வித்தையில் நிபுணனுக வருவான்.

அரு : நமக்கு வேண்டாதவர்களை நிபுணர்களாக ஆக்குவது—ஆகவிடுவது மிக ஆபத்துதானே, ஸ்வாமி!

துரோ : அவனுலே நமக்கு ஆபத்து ஒன்றும் வராது!

(கர்ணன் வருகிருன்,)

கர்ணன் : நமஸ்தே! நமஸ்தே! ஸ்வாமி! உங்கள் பாதங்களை வணங்குகிறேன்! தங்கள் திவ்ய சமூகத்தைத் தேடி ஒரு ராஜகுமாரன் வந்திருக்கிருன்.

துரோ : (ஆவலுடன்) ராஜகுமாரனு? ஏன்?

கர்ணன் : தங்களுடைய குருகுலத்தில் சேர்வதற்காக, வில்வித்தை பயில்வதற்காக.

துரோ : (மகிழ்ச்சியுடன்) நம்முடைய சீடனுக, மற்ருெரு ராஜகுமாரன்! அவனை வரச் சொல்!

(கர்ணன் போய் ஏகலைவனை அழைத்துவருகிருன்.)

அரு : என்ன ஸ்வாமி! அரசகுமாரன் என்று கர்ணன் சொன்னுன்! யாரோ நாடோடி ஒருவன் நம்முன் வந்து நிற்கிருன்.

(ஏகலைவன் துரோணரின் முன் விழுந்து வணங்கி, பின் எழுந்து நிற்கிருன்.)

ஏகலைவன் : குவலயம் போற்றும் குருவே! நான் அரசர் ஹிரண்யதனுசின் குமாரன். தங்களிடம் வில்வித்தை பயிலும் நோக்கத்துடன் இந்த இடத்தைத் தேடி வந்தேன். தங்கள் சீடர்களில் ஒருவனுக என்னையும் ஏற்றுக்கொண்டு, சிட்சைதர வேண்டுகிறேன்.

அரு : ஹிரண்யதனுஸ்! அப்படிப்பட்ட அரசர் பெயரை நாம் கேள்விப்பட்டதில்லையே! எந்த தேசத்துக்கு அரசரோ?

ஏக : வேடர்குலத்தரசர்! பக்கத்திலுள்ள காடும் மலைகளும் அவர் ஆணைக்குட்பட்டவை!

அரு : அதுதானே பார்த்தேன்! நாட்டுக்கு அரசரில்லை, காட்டுக்கு அரசர்!

துரோ : இதற்கு முன்னம் நீ வில்வித்தை பயின்றதுண்டா?

ஏக : நானாகத் தெரிந்துகொண்டதுதான். முறைப்படி, ஆசாரிய சிலர் ஒருவரையடுத்து வில்வித்தையைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டானது. ஆரியவர்த்தத்தில், வில்வித்தையில் தன்னிகரற்ற குருவாக விளங்குகிற உங்களை நாடிவந்தேன். என்னை உங்களுடைய சீடராக ஏற்றுக்கொள்ளுங்கள்.

அரு : வேடர் குலத்தான், அவன் இந்த குருகுலத்துக்கு வருவதா? இந்த ஆஸ்ரமம் பெயர் வாய்ந்தது. புனிதத்தன்மை பொருந்தியது. அரசகுமாரர்கள் நடமாடுவது, ஸ்வாமி! இங்கு இவனைப்போன்ற கண்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

ஏக : நான் வேடுவர் குலத்தைச் சேர்ந்தவன்தான், மறைக்கவில்லை. ஆனால் அரசகுமாரனுங்கூட. இந்த குருகுலத்தில் இப்பொழுது இருக்கும் அரசகுமாரர்கள் செலுத்தும் காணிக்கையைவிட பன்மடங்கு அதிகமான அளவு நான் தருகிறேன்! குருகுலத்தில் எல்லாவகையிலும் கட்டுப்பட்டு, குறைவெதுவும் வைக்காமல் நடந்துகொள்வேன்! தயை செய்து என்னை உங்களுடைய குருகுலத்தில் சேர்த்துக்கொள்ளுங்கள் உங்களுடைய அடிமையாக நான் வாழ்வேன்!

அரு : குருவே! குருகுலத்தின் புனிதத்தன்மையை நாம் போக்கிவிடக்கூடாது. இப்பொழுதே ஆடு மேய்க்கவேண்டியவர்களும், ஆற்றிலே மிதந்து வந்தவர்களும், ஊர்பேர் தெரியாதவர்களும் நமது குருகுலத்துக்குள் நுழைந்துவிட்டார்கள். இனிமேலும் அவர்களை அதிகப்படுத்தக் கூடாது.

கர்ணன் : குருவே, இனி என்னால் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது! ஆணவமொழி பேசிடும் இவன் நாவை அறுத்தெறி தால்தான் என் ஆத்திரம் தணியும். மாளிகைவாசி என்றால் மமதை அதி கமோ? பட்டாடை பூண்டு, பகட்டுமொழி பேசினால் எல்லோரும் பணிந்துவிடுவார்கள் என்ற எண்ணமோ? அருச்சுனா! உனக்கு ஆண்மையிருந்தால், வில்வித்தை கற்றது உண்மையானால், எடு உன் வில்லை, வா போருக்கு! உன் போலி கௌரவத்தை என் அம்பு முனையி தூளாக்கிக் காட்டுகிறேன்!

அரு : அதற்குத்தான் நானும் இவ்வள நாளும் காத்துக்கொண்டிருந்தே தேம்ராட்டும் குடியில் திண்டாடுபவனே உன் தலையைத் தெருவில் உருட்டிவி கிறேன்வா!

துரோ : போதும்! நிறுத்துங்கள் உங்க சண்டையை! கர்ணா, உன் வில்லை கீ போடு! அருச்சுனா உன் அம்பை உ யில் வை! வேடர்குலச் சிறுவனே பார்த்தாயா, அரசகுமாரர்கள் பழகு இடம்! இந்தக் குருகுலத்தில் உன்போ றவர்களை வைத்துக்கொண்டால் சண் சச்சரவுதான் அதிகமாகும்.

ஏக : குருவே! சண்டை சச்சரவு எதற்கு நான் இடம் வைத்துக்கொள்ளமாட்டே மற்றவர்கள் காலாலிட்ட வேலையை தலையால் முடித்து நான் நிற்பேன். த ளுடைய சீடனாக, அடிமையாக வாழ இ மளியுங்கள். எனக்கென்று எதுவும் சொ வித்தரவேண்டாம், குருகுலத்தில் ம சீடர்களுக்கு நீங்கள் வில்வித்தைக் க றுத்தருவதைப் பார்த்துக்கொண்டிரு எனக்கு அனுமதி கொடுத்தா போதும். அதைக்கொண்டு திருப் யடைவேன்.

அரோ : அருச்சுனா! இவனை......

அரு : கூடவே, கூடாது! இவனை இந்த கு குலத்தில் அனுமதிக்க முடியாது. கு குலவாசம் என்றால் சாமான்யமா? வி வித்தை என்றால் எல்லோருக்கும் வரும அதற்கு குலம், அந்தஸ்து, தகுதி, இ கள் கிடையாதோ? அட்சராப்பியாசமு அஸ்திர வித்தையும் பிராமணர்களுக் க்ஷத்திரியர்களுக்கும் மட்டும்தான் உரிய என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்க இவன் சூத்திரன். இவன் குலத்தொழி செய்துகொண்டுபோகட்டுமே! இ என் குருகுல அப்பியாசத்துக்கு கிறான்?

ஏக: ஐயனே! நான் வேடர் குலத்தவன். வில்வித்தை வேடர் குலத்தொழில். மற்றவர்களைவிட எங்களுக்குத்தான் அதிகம் உரிமை உண்டு. அதனால் இங்கு நான் வரவில்லை. குருகுலத்தில் தயைசெய்து என்னைச் சேர்த்துக்கொள்ளுங்கள். எனது திறமை மற்றவர்களை விடக் குறைவானதாக இருந்தால், நீங்கள் சொல்வதற்கு முன்னதாக நானாகவே விலகிச் சென்று விடுகிறேன்.

அரு: நீ என்ன சொன்னாலும், உனக்கு இந்த குருகுலத்தில் இடம் கிடையாது. உன்னைப்போன்ற தாழ்ந்த குலத்தவர்களைப் பராமரிக்க ஏற்பட்ட அன்னசத்திரமல்ல, அஸ்தினாபுரத்து இளவரசர்களின் குரு இருக்கும் ஆஸ்ரமமாகும் இது!

ஏக: அஸ்தினாபுரத்து அரசகுமாரரே! உங்களைத்தேடி நான் வரவில்லை. நான் தேடி வந்தது, வில்வித்தையிற் சிறந்த குரு துரோணாச்சாரியாரை! எனது குரு என்னை ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையுடன் வந்துள்ளேன்.

அரு: எவ்வளவு அலட்சியத்துடன் என்னைப் பற்றிப் பேசிவிட்டான்! குருவே! ஏன் தயக்கம்? குருகுலத்தில் இடம் இல்லையென்று சொல்லி அனுப்புங்கள். இத்தகையவர்களுடன் நாம் முகங்கொடுத்துப் பேசுகிறோமென்று தெரிந்தால்கூட, கிருபாச்சாரியாருக்குக் கோபம் வரும்.

துரோ: அப்பனே! ஹிரண்யதனுசின் புதல்வனே! நீ வில்வித்தையில் கெட்டிக்காரனாவாய்! ஆனால்......

ஏக: ஆனால்......!

துரோ: இப்பொழுது குருகுலத்தில் இடம் இல்லை, நீ போகலாம்.

ஏக: குருவே!

துரோ: நான் சொல்வதற்கு வேறொன்றும் இல்லை.

அரு: ஏன் இன்னும் நின்றுகொண்டிருக்கிறாய்? ஆச்சாரியார் அவர்களே நீ இங்கு இருக்க முடியாது என்று கூறிவிட்டார். போ! போய்விடு! எங்கள் நேரத்தை வீணாக்காதே! வாருங்கள் குருவே! நாம் போகலாம்!

ஏக: மறுபடியும் தாள்வணங்கி கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் தயைகூர்ந்து இந்த ஏழையை ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா?

(துரோணர் பேசாமலிருக்கிறார்)

அரு: போய் காட்டில் ஏதாவது வேலை இருந்தால் கவனி! வித்தை கற்க குருகுலம் வந்துவிட்டான்! இவன், வேடன், சூத்திரன்! எவ்வளவு நெஞ்சழுத்தம்!

ஏக: குருவே! நான் போகிறேன்! நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், நான் உங்களுடைய சிஷ்யனாகவே என்றென்றும் இருப்பேன்! (அருச்சுனனைப் பார்த்து) அப்பனே! நீ சொல்லை அதிகம் வீசுகிறாய்! நான் வில்லை எடுத்தால் நீ தாங்கமாட்டாய்! (போகிறான்).

அரு: போடா! காட்டுமிராண்டி! வீரம் வேறு பேசுகிறாயோ!

ஏக: (போகிறவன் திரும்பிப்பார்த்து) என் கோபத்தைக் கிளறாதே! காட்டுமிராண்டிகள் கட்டு மீறினால், நாட்டில் உன்னைப் போன்றோர் அரசாளமுடியாது!

(ஏகலைவனுடன் கர்ணன் வெளிச் செல்லுகிறான்.)

(திரை விழுகிறது).

## இரண்டாவது காட்சி

(காட்டுப்பாதை. வருத்தத்துடன் ஏகலைவன் வருகிறான். கர்ணன் பின்னால் ஆறுதல்கூறிவருகிறான்.)

கர்: கவலைப்படாதே, ஏகலைவா! விற்கலையில் உனக்கு இருக்கும் ஆர்வத்துக்குத் துரோணர் போன்ற குரு கிடைத்திருந்தால், சிறந்த வில் வீரனாக ஆகியிருப்பாய்!

ஏக: அவன் யார், துரோணாச்சாரியார் பக்கத்தில் நின்றுகொண்டு உரிச்சக் கோழிக் குஞ்சுமாதிரித் துள்ளிக்கொண்டிருந்தான்?

கர்: அவன்தான் அருச்சுனன். பாண்டவ புத்திரர்களில் ஒருவன். அரசகுடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற ஆணவத்தால் குருகுலத்தையே ஆட்டிவைக்கிறான்! குருவும் அவன் சொல்லை மீறி நடப்பதில்லை! அவனுக்கு மட்டும் பல வித்தைகளைக் குரு தனியாகச் சொல்லிக்கொடுக்கிறார்.

ஏக : நான் குருகுலத்தில் சேர்ந்தால் இவனுக்கென்னவாம்?

கர் : பயம், பொறாமை! தன்னைத்தவிர வேறு யாரும் வில்வித்தையில் மேலாக வந்துவிடக்கூடாதென்ற எண்ணம்! நான் இந்த குருகுலத்தில் சேரமுயன்றபொழுது, என்னை விடாமல் இவன் தடைசெய்தான். பின் துரியோதனன் ஆதரவால் நான் துரோணருடைய சீடனாக ஆகமுடிந்தது! இருக்கட்டும் ஒருநாளைக்கு இந்த மண்டைகர்வியை விற்போரில் நான் சந்திக்காமல் இருக்கப்போவதில்லை. அப்பொழுது அவனுடைய மணிமகுடத்தை மண்ணில் விழச்செய்கிறேன்! நான் போகிறேன். குருகுலத்தில் வேலைகள் பலவுள்ளன. (போகிறான்.)

(ஏகலைவன் அடியெடுத்து வைக்கிறான். அவனுடைய நண்பன் வனதத்தன் பின்னால் வந்து முதுகில் தட்டுகிறான்.)

வனதத்தன் : (சிரித்துக்கொண்டு) பிரமாதமான வெற்றியோ! நீ துரோணாச்சாரியாரின் பர்ணசாலையில் நுழைந்ததிலிருந்து, நெடுநேரமாக நான் இங்கு காத்துக்கொண்டிருக்கிறேன்! குரு இப்பொழுதே பாடஞ் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தாரா? வில் வித்தை முழுவதையும் கற்றுக்கொண்டு திரும்புகிறாயா?

ஏக : நண்பா! வனதத்தா! கேலிசெய்யாதே!

வன : தோல்வி! நான் வரும்பொழுதே சொன்னேனே, கேட்டாயா? அந்தத் துரோணாச்சாரி உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரென்று. அவருக்கு ஏராளமான அரசகுமாரர்கள் இருக்கிறார்கள், சீடர்களாக!

ஏக : நான் வேடனும், சூத்திரனும், காட்டுமிராண்டியாம்! அந்த குருகுலத்தில் வில் வித்தை கற்றுக்கொள்ளத் தகுதியற்றவனும்!

வன : என்ன, ஏகலைவா! அந்த இழிமொழிகளை கேட்டுக்கொண்டு பேசாமல் வந்துவிட்டாயா? வில்வித்தை பயின்று வீரனாக வேண்டும் என்று அங்கு போனாய், ஆனால் கோழையாகவன்றோ வெளிவந்திருக்கிறாய்! அவன் குருவாக இருக்கட்டும், துரோணராக இருக்கட்டும்!

ஏக : துரோணர் அவ்வாறு சொல்லவில்லை அவருடனிருந்த அரசகுமாரன்—பெயர் அருச்சுனனாம்—அவன் அடாது கூறி, நான் குருகுலத்தில் சேருவதைத் தடுத்துவிட்டான்.

வன : அவன் அரசகுமாரனென்றால் என்ன, பழிமொழி தூற்றிய அவன் நாவை அறுத்தெறிந்து, உடலைப் பதப்படுத்தி அனுப்பியிருக்கவேண்டாமா? உன்னுடைய வில் எத்தகையது, காட்டு மறவர் வீரம் எத்தகையது என்று நிரூபித்திருக்க வேண்டாமா? ஆர்த்து வரும் வேங்கையைக் கண்டு நாம் அஞ்சியதில்லை, சீற்றத்துடன் பாயும் சிங்கத்தின் கர்ஜனை நம்முடைய சித்தத்தைக் கலக்கியதில்லை, எனவே, அரசகுமாரனாம், அருச்சுனனாம்! அவன் கூவியது கேட்டு பேசாமல் வந்துவிட்டாயே!

ஏக : வனதத்தா! பழி தூவிய அச்சிறுமதியாளன்மீது ஒரு அம்பை எய்து மாசைத் துடைத்திருப்பேன்; ஆனால் குரு துரோணாச்சாரியார் முன்னிலையில், நான் குருவை நாடிச்செல்லும் வேளையில், சண்டை துவக்கக்கூடாது என்று என்னை அடக்கிக்கொண்டு இருந்தேன்.

வன : உனக்கும் இந்த வரவேற்பு வேண்டியதுதான்! பரம்பரை பரம்பரையாக வில்லேந்தி வாழ்ந்தவர்கள் நாம். அப்படியிருக்க புல்லேந்தி ஒருவனைத்தேடி நீ வந்தாயே! அதற்குப் பலன் கிடைத்துவிட்டது! வா போகலாம், வேறு நல்ல வில்லாசிரியர் கிடைக்காமலா போவார்கள்!

ஏக : இல்லை, நண்பா! இனி நான் வேறொரு குருவைத் தேடிப்போகப்போவதில்லை. துரோணர்தான் எனக்கு குருவாக இருப்பார். அவருடைய குருகுலத்தில் எனக்கு இடம் தரப்படவில்லை. ஆனால் நான் அமைக்கும் குருகுலத்துக்கு அவர் வந்துவிடுவார். அவருடைய பார்வையில் நான் வில்வித்தை பழகுவேன். வில் வித்தையில் ஏகலைவனுக்கு ஈடானவர்கள் வேறு எவரும் இல்லை என்பதை உலகறியச் செய்வேன்!

வன : என்ன நண்பா! நீ சொல்வது புரியவில்லை! அஸ்தினாபுரத்தை விட்டு துரோணர் நமது ஆரண்யத்துக்கு வந்துவிடுவாரா? எப்படிச் சொல்லுகிறாய்?

ஏக : வா! போகலாம்! பின் தெரிந்துகொள்வாய்! (போகிறார்கள்)

(திரை விழுகிறது)

## மூன்றாவது காட்சி

(காட்டின் மத்தியில் மரம் தழைகள் அடர்ந்த இடம். அருச்சுனன், அசுவத்தாமா வில்லேந்திவருகிறார்கள்.)

அசு : அருச்சுனா, போதும்! வேட்டையாடுவதை நிறுத்தி, சற்றுநேரம் இளைப்பாறலாம்!

அரு : அதற்குள் களைத்துவிட்டாயே! இதுவரை எவ்வளவு மிருகங்களை வீழ்த்தியிருக்கிறாய் ?

அசு : வேட்டையாடும்பொழுது இதையெல்லாம் கணக்கில் வைத்துக்கொண்டிருக்க முடியுமா ?

அரு : அப்படியானால் பெரிய வேட்டையோ?

அசு : நான்கு காக்காய்! இரண்டு முயல்! மூன்று வாத்து! ஐந்து ஓணான்! ஒரு மான்!

அரு : மான்கூட உன் வேட்டையில் இங்கு விழுந்ததா ?

அசு : அதுதான் முக்கியமானது! மிகவும் வேடிக்கையான வேட்டை! என்னிடமிருந்து ஒரு முயல் தப்பி ஓடியது. வேட்டையாட வந்த நான் அதை விடுவேனா? துரத்திக்கொண்டு ஓடினேன். வழியில் எங்களைக் கண்டு மிரண்டு ஒரு மான் துள்ளிக் குதித்தது; ஆனால் பக்கத்திலிருந்த பள்ளத்தில் விழுந்து காலடிபட்டுக்கிடந்தது. நான் தைரியமாகப் பக்கத்தில் போய் அம்புகளை வீசி......

அரு : அந்த மானைக் கொன்றுவிட்டாய்!

அசு : ஆமாம்! இனி அந்த மான் தோலை எடுத்துப்போய் ஆசிரமத்தில் வைத்துக் கொள்வேன். உன் வேட்டையில் ஏதாவது விழுந்ததா ?

அரு : எண்ணிக்கையில் உன்னைப்போல அதிகமிருக்காது. ஒன்றே ஒன்றுதான்!

அசு : அவ்வளவுதானா ? என்ன மானா, முயலா ?

அரு : ஒரு புலி!

அசு : ஐயோ! புலியா ? அது உன்னை ஒன்றும் செய்யவில்லையே ?

அரு : என்ன செய்யும்? அதுதான் செத்துவிட்டதே ?

அசு : செத்த புலியை அம்பு போட்டு நீ வேட்டையாடினாயா? அதுதான் நல்ல வேலை, ஆபத்தில்லாதது!

அரு : இல்லையில்லை, உயிரோடு பாய்ந்துவந்த புலியின்மீது அம்பு போட்டுக் கொன்றேன்.

அசு : அம்பு தப்பியிருந்தால்,... அதைப்பற்றிப் பேசவேண்டாம்! எனக்குப் பயமாக இருக்கிறது.

அரு : புலியை இழுத்துவர என் நாயை விட்டு வந்தேன். அதை இன்னும் காணுமே!

(பணியாள் உள்ளே வருகிறான்).

பணி : பிரபு!

அரு : எனது நாய் எங்கே இன்னுங் காணோம்?

பணி : அதைப்பற்றித் தங்களிடம் சொல்லத்தான் வந்தேன். அது செத்துவிட்டது!

அரு : என்ன, சற்றுமுன் வாலைக் குழைத்துக் கொண்டு நன்றாக ஓடிவந்ததே! செத்தது என் நாய்தானா, நன்றாகப் பார்த்தாயா?

பணி : யாரோ அம்பெய்து அதைக் கொன்றுவிட்டார்கள்!

அரு : அருச்சுனன் நாய், அதன்மீது அம்பெய்யும் துணிவு யாருக்குப் பிறந்தது? கர்ணன் செய்தானா? கௌரவர்கள் யாராவது செய்தார்களா? நாயைக் கொன்றது யார் என்று கண்டுபிடிக்கவில்லையா?

பணி : நாயைத் தூக்கிக்கொண்டு அதோ வருகிறார்கள். அவர்களில் ஒருவனைக் கேட்டால் தெரியும்.

அரு : போய்க் கேட்கிறேன்.

(அருச்சுனனும் பணியாளும் போகிறார்கள்.)

அசு : வேட்டைக்குப் போகலாம் என்றதும் ஏதோ விளையாட்டு என்று வந்தேன். இங்கே என்னடாவென்றால், சிங்கம் புலி சிறுத்தை நம்ம உயிரோடு விளையாட வருது. அதோ! அரண்மனைப் பரிசாரகன் போகிறான்! அவனோடு கூடாரத்துக்குப் போனால் நல்ல சாப்பாடு கிடைக்கும். (போகிறான்.)

(அருச்சுனனும் மற்றொரு பணியாளும் வருகிறார்கள்.)

பணி : நாய் குரைத்துக்கொண்டு, அவன்மீது பாய்ந்தது. நாயின்மீது பாணத்தைத் தொடுத்தான்.

அரு : நாய் இருக்கட்டும். நாயின் வாயில் ஏழு அம்புகள் தைத்திருக்கின்றனவே, அதெப்படி வந்தது ?

பணி : அந்த வேடன், தன் வில்லில் ஏழு அம்புகளை வைத்து, ஒரே கொத்தாக விட்டான். எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அரு : அவன் பெயரென்ன ? யாரென்று தெரிந்துகொண்டீர்களா ?

பணி : அவனுடைய வில்வித்தையைப் பார்த்தால் ஆச்சரியமாக இருந்தது. அதே சமயத்தில் பக்கத்தில் போக பயமாகவும் இருந்தது. அவன் எங்களைவிட்டுப் போனதும், மற்றவர்களைக் கேட்டோம். அவன் இங்குள்ள வேடர்களின் அரசனான ஹிரண்யதனுசின் குமாரரென்று கூறினார்கள். வில்வித்தையில் துரோணருடைய சீடன் என்று அவனைச் சொன்னார்கள்.

அரு : ஹிரண்யதனுஸ்—இதற்குமுன் அது எப்பொழுதோ கேள்விப்பட்ட பெயராக இருக்கிறதே ! அதிலும் துரோணருடைய சீடனாம் ! இந்தக் காட்டில் தன்னுடைய சீடன் ஒருவன் இருப்பதாகத் துரோணர் கூறியதில்லையே ! அதிலும் அந்தச் சீடனுக்கு ஏழு அம்புகளை ஒரே கொத்தாக எய்யும் சப்தாஸ்திர வித்தைத் தெரிந்திருக்கிறது !

(அருச்சுனன் உலவிக்கொண்டிருக்கிறான். துரோணர் வருகிறார்.)

துரோ : ஏன், அருச்சுனா ! இவ்வளவு விசனத்துடன் உலவிக்கொண்டிருக்கிறாய் ?

அரு : ஸ்வாமி ! மோசம்போனேன் ! ஏமாந்தேன், ஏமாற்றப்பட்டேன் ! உலகத்தில் எதை மெய்யென்றும், எதைப் பொய்யென்றும் நம்புவதென்று எனக்குப் புரியவில்லை. நான் வைத்த நம்பிக்கை, நான் அடைந்த பெருமை எல்லாம் தூளாகிவிட்டன !

துரோ : பார்த்திபா ! பதட்டப்படாமல் சொல், என்ன நடந்தது ? ஏன் இவ்வாறு வேதனைப்படுகிறாய் ?

அரு : எனது நாய் அதோ இறந்துகிடக்கிறதே, பார்த்தீர்களா !

துரோ : வேடிக்கை ! நாய் செத்துவிட் தற்கு இவ்வளவு துக்கமா ? உன் சம்ப துக்கு இதைப்போல ஆயிரம் வேட்டை நாய்கள் பின்னால் ஓடிவரும் ! போடா இதற்குத்தானா கவலைப்படுகிறாய் ?

அரு : நாய் இறந்ததைப் பற்றிக் கவலைப்ப வில்லை. அது இறந்த விதத்தைப் பற் தான். அதைப் பாருங்கள் ! அதன் வாயில் ஏழு அம்புகள் ஒரே கொத்தாகப் பாய்ந்திருக்கின்றன !

துரோ : என்ன ?

அரு : ஆமாம் ! 'உனக்கு மேற்பட்ட சிஷ்யன் எனக்கில்லை' என்று நீங்கள் சொல்லியிரு கிறீர்கள் ! 'உனக்கு மட்டும்தான் இந் அபூர்வ வித்தையைக் கற்றுக்கொடு தேன்' என்றும் சொன்னீர்கள் ! அதனா நான் மிகவும் பெருமைப்பட்டிருந்தேன் ஆனால் என்னைவிடச் சிறந்த சிஷ்யன் இந்தக் காட்டில் இருக்கிறானென்று தெ கிறது. எனக்கு மட்டும் என்று சொ லித்தரப்பட்ட அபூர்வ வில்வித்தை அந் சிஷ்யனுக்கும் தெரிந்திருக்கிறது. யா அந்தப் பாக்கியவான், உங்கள் அருளை பெற்றவன், வில்வித்தையில் எனக்கு போட்டியாக வருபவன் ? தயவுசெய் சொல்லுங்கள். துரோணருடைய பிரத சீடன் என்று இதுவரை நான் நினை துக்கொண்டது, பெருமைப்பட்டது எ லாம் வீண் ! இன்னும் அவனுக்கு வே என்னென்ன அபூர்வ வில்வித்தைகளை கற்றுக்கொடுத்தீர்களோ, எனக்குத்தெ யாது. ஸ்வாமி ! என்னை ஏன் தாழ்த் விட்டீர்கள், குருபக்தியில் நான் குறை வைத்தேனா ? கொடுத்த வாக்கை நிறை வேற்றமாட்டேன் என்று நினைத்தீ களா ? எனக்குப் போட்டியாக மற்றொ சீடனை ஏன் உண்டாக்கினீர்கள் ?

(அடுத்த இதழில் முடிவுறும்)

இவ்விதழில் விடப்பட்ட

**பனிவெளியில்**

(தொடர்கதை)

அடுத்த இதழில் வெளிவரும்.

# உழுதவன் கணக்குப் பார்த்தால்

"உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்குநாறும் மிஞ்சாது" என்பது பழமொழி. இது பழமொழி தான் என்ருலும் நம் நாட்டைப் பொறுத்த வரையில் இந்தக் காலத்திலும் இது பொருந் தும். உழுது, பண்படுத்தி, உரமிட்டுப், பயிரிட் டுக், களையெடுத்துக், காவல்காத்து விளைந்த கதிரைக் கண்டு களிப்படைகிருன் உழவன். இந்தக் களிப்பு, அறுவடைவரைதான் நீடிக் கிறது. அறுவடை முடிந்ததும் உழுதலுத்த குடியானவனுக்கு, உரம், உழவடை—அறு வடைச் செலவுகள்போக எஞ்சியிருப்பது அவன் கஞ்சிக்குக்கூடக் காணுது. பிறகு கடன் வாங்குகிருன் கஞ்சிக்காக. வாங்கின கடனுக்கு வட்டியுடன் சேர்த்து அடுத்த அறு வடையில் அளந்து கொடுத்துவிட்டு, அண் ணந்து பார்த்துக் காலம் கழிக்கவேண்டிய நிலையில் இருக்கிருன். இந்த நிலை இன்று நேற்று அல்ல, தொன்றுதொட்டு இந்நாட்டில் இருந்துவருகிறது. வெள்ளையன் ஆட்சிபுரிந்த அந்தக்காலத்திலும் சரி குடியாட்சி நடக்கும் இந்தக்காலத்திலும்சரி இந்தத் துயரத் தொடர்கதை இந்நாட்டு உழவனைத் தொடர்ந்துகொண்டே வருகிறது.

மற்ற தொழில்களைப்போலன்றி உழவுத் தொழில் ஒரு வரம்பிற்கு உட்பட்டு இயங்கி, ஒரு குறிப்பிட்ட பலனைக் கொடுப்பதில்லை. உழவுத் தொழிலைத் தலையாய தொழிலாகக் கொண்டுள்ளவர்களுக்குத் துணைத்தொழில் எதுவும் நம் நாட்டில் இல்லை; வேறு வருவாய்க் கும் வழியில்லை. ஏனைய நாடுகளில் உழவுத் தொழிலைப் பின்பற்றுபவர்க்கு இல்லாத தொல்லையும், வறுமையும் நம் நாட்டில் அதே தொழிலைப் பின்பற்றுபவர்க்கு ஏராளமாக இருக்கின்றன. இவற்றில் முதன்மையாக இருப்பது உழவன் கடன் தொல்லையே. ஏனைய நாடுகளிலும் உழவர்க்குக் கடன் இருக் கிறது. ஆனால், மற்ற நாடுகளுக்கும் நம்நாட் டுக்கும் உள்ள வேறுபாடு எதைப்பொறுத்து என்ருல் கடன் ஏற்பட்ட காரணத்தைப் பொறுத்துதான். மற்ற நாடுகளில் உழவர்கள் கடன் வாங்கி, புதுப்புதுக் கருவிகள் கண்டு, விஞ்ஞானத் துணையுடன், நிலவளத்தைப் பெருக்கி வளமாக வாழ்கின்றனர். நம்நாட்டு உழவர்கள் கடன் வாங்கி தங்கள் வறுமை யைப் போக்கி, வளத்தைப் பெருக்கி, வாட்டத் தைத் தவிர்க்கும் வழிகளில் பயன்படுத்தாமல், பயனற்ற வழியில் செலவழித்து வருகிருர்கள்—வந்தார்கள்.

உழவர் கடன் பற்றிய ஆய்வுக்குழுக்கள் பல நியமிக்கப்பட்டன,மத்திய, மாநில ஆட்சியாளர் களால். அவற்றுள் முக்கியமானவை 1875-ல் நிறுவப்பட்ட தக்கண உழவர்குழு, 1880-ல் நிறுவப்பட்ட பஞ்சவிசாரணைக் குழு, 1892-ஆம் ஆண்டு பிரடரிக் நிக்கல்சன் அறிக்கை (Sir Frederick Nicholson's Report) சென்னை மாகாண வங்கி விசாரணைக்குழு, 1935-ம் ஆண்டு உழவர் கடன் அறிக்கை, 1946-ஆம் ஆண்டு உழவர் கடன் பற்றிய பொருளாதார வல்லுநர் அறிக்கை முதலி யன. அவையெல்லாம் இந்நாட்டின் உழவர் நிலையைப்பற்றித் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

## உழவுத்தொழில் உருக்குலைவதற்கான காரணங்கள்

**(1) தலைமுறைக் கடன் :** ஒவ்வொரு உழவனுக் கும் தன் பாட்டன், தகப்பன் முதலிய முன் னோர்கள் பல வழிகளிலும் செலவிட்டுக் கடன் பட்டு வைத்த பெரும் சுமைதான் இந்தத் தலை முறைக்கடன். வட்டியும் முதலுமாகச் சராசரி ஒவ்வொரு உழவனுக்கும், குறிப்பாக சென்னை மாநிலத்தில் மட்டும் 1945-ல் சுமார் ரூ. 113 ஆகும்.

| | | |
|---|---|---|
| 1945-ல் சாதாரண உழவன் ஒருவனின் குடும்பக் கடன் | ரூ. | 3757·1 |
| குடும்பத்தின் ஆண்டுச் செலவு | ரூ. | 2947·9 |
| 1945-ல் சாதாரண உழவனின் குடும்பத்தின் மொத்த தேவை | ரூ. | 6705·0 |
| 1945-ல் வருமானம் | ரூ. | 4066·0 |
| சாதாரணமாக வரவுக்குமேல் தேவைப்படும் செலவு | ரூ. | 2,639·0 |

இது தவிர எதிர்பாராத வகையில் ஏற்படும் தொல்லைகளும், ஆடம்பரச் செலவுகளும் உழவனை மேலும் புதிய கடன்காரனாக ஆக்கிவிடுகின்றன.

**(2) பருவமழை இன்மை :** நம்நாட்டு உழவுத் தொழில் பெரும்பாலும் பருவமழையையே நம்பி இருக்கிறது. பருவமழையையே நம்பி ஆடப்படும் இந்தச் சூதாட்டத்தில் இலாபத்தைக் காட்டிலும் இழப்புதான் அதிகம். பருவமழை பெய்யத் தவறிவிட்டால் பஞ்சம் தலை விரித்தாட ஆரம்பித்துவிடுகிறது. பருவமழை அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் அதனால் ஏற்படும் அழிவும் அதிகம். இந்தப் பருவமழை பெய்யத் தவறினாலும், அதிகரித்து விட்டாலும் ஆபத்து. நம் நாட்டில் இதுவரை பருவமழையின்மையைக் காட்டிலும் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட அழிவு அதிகம். பருவமழையின்மை, வெள்ளம் இவற்றால் ஏற்படும் நலிவையும் இழப்பையும் ஈடுகட்ட வேறு வருவாய் இல்லாத காரணத்தால் உழவன் கடன் வாங்குகிறான். ஏற்கனவே உள்ள கடனுடன் இந்தக் கடனும் வட்டியும் சேர்ந்து உழவனின் கடன்பளுவை அதிகமாக்குகிறது.

**(3) அதிக விளைச்சலின்மை :** உழவுத்தொழிலைப் பின்பற்றும் உலக நாடுகளில் பெரியது நம் நாடு. ஐ. நா.வின் பொருளாதாரக் குழுவினரால் 1951-ல் வெளியிடப்பட்ட "நிலச்சீர்திருத்தம்" என்ற ஏட்டில் கண்டபடி உலகில் உழவுத்தொழிலை நம்பி வாழும் மக்கள் தொகை 128·5 கோடியாகும். இதில் 87·8 கோடி மக்கள் ஆசியாவில் வாழ்கிறார்கள். ஐரோப்பாவில் மூவருக்கு ஒருவரும், வட அமெரிக்காவில் ஐவருக்கு ஒருவரும், ஆசியா ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் நால்வருக்கு மூவரும் நிலத்தையே நம்பி வாழ்கிறார்கள். நிலத்தை நம்பி வாழும் மக்கள் அதிகம் இருக்கும் நாட்டில், ஒரு ஏக்கரின் சராசரி வரும்படி குறைவாகவே இருக்கிறது. ஐ. நா. உணவு விவசாய மாதாந்தர வெளியீட்டில் கண்டபடி வட அமெரிக்காவில் தலைக்கு $2\frac{1}{2}$ டன்னும், ஆசியாவில் $\frac{1}{4}$ டன்னுக்கும் குறைவாகவும், ஆப்பிரிக்காவில் 1/8 டன் ஆகவும் விளைச்சல் இருக்கிறது. உலக உற்பத்தியில் 95.|° நெல் ஆசியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நெல் உற்பத்தியில் நம் நாடு உலகில் இரண்டாவதாக இருக்கிறது. இருந்தும் ஏக்கர் ஒன்றுக்கு இங்கு உற்பத்தியாகும் நெல் மற்ற நாடுகளைக் காட்டிலும் குறைவே. இத்தாலி மிகச் சிறிய நாடாக இருந்தபோதிலும் உலகில் நெல் உற்பத்தியில் மற்ற எல்லா நாடுகளைக் காட்டிலும் ஏக்கருக்கு அதிகமான உற்பத்தியைக் கொண்டிருக்கிறது. (இதன் விபரம் கீழே உள்ள படத்தில் காண்க) இதே போன்று மற்ற பொருள்களின் உற்பத்தியும் ஏனைய நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் குறைவாகவே இருக்கின்றது.




(அளவைகள் பவுண்டுகளில்)

**(4) சிறுநிலப்பிரிவுகள் :** 1948-ம் ஆண்டு நம் நாட்டில் மக்கள் தொகை 33·7 கோடி. விவசாயத்திற்குப் பயன்பட்ட நிலப்பரப்பு 35·8 கோடி ஏக்கர். ஆள் ஒன்றுக்கு விவசாயத்திற்குப் பயன்படும் நிலத்தின் பரப்பு 1·06 ஏக்கர். விவசாயத்திற்கு ஏற்ற சிறிய பண்ணை எத்தனை ஏக்கர் கொண்டது என்று இன்னும் திட்டவட்டமாக முடிவுசெய்யப்படவில்லை. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் 75 ஏக்கர் கொண்டது ஒரு சிறிய பண்ணையாகக் கருதப்படுகிறது. கிழக்கு ஐரோப்பாவில் $12\frac{1}{2}$ ஏக்கர் ஒரு சிறிய பண்ணையாகக் கருதப்

டுகிறது. ஆனால் ஆசிய நாடுகளில் $2\frac{1}{2}$ ஏக்கர் உடைய பண்ணைக்குப் பெரிய இடமாகக் கருதப் படுகிறது. நிலத்தின் அளவு குறைவாக இருப்பதுடன் வெவ்வேறு இடங்களில் சித றுண்டும் இருக்கின்றன. உதாரணமாக 10 ஏக்கர் கொண்ட ஒரு பண்ணை சிறு சிறு பிரி வாகப் பிரிந்து 30 இடங்களில் இருக்கும். இத னால் காலமும் சக்தியும், நேரமும் உழைப்பும் வீழ்படுத்தப்படுகின்றன. சிறு துண்டு நிலத்தை நம்பி உழவன் தன் வாழ்க்கையை அதன்பேரிலேயே அமைத்துக்கொள்கிறான். ஆனால் அதனைப் பண்படுத்தவும் முடிவ தில்லை; அதிலிருந்து போதுமான பலனைப் பெறவும் முடிவதில்லை.

(5) கால்நடைகள் : உலகில் உள்ள கால்நடை களின் மொத்த எண்ணிக்கை 69 கோடி. நம் நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 37 கோடி. உலகில் மற்ற எந்த நாட்டைக் காட்டிலும் இந்தியாவில்தான் கால்நடைகள் அதிகம். நம் நாடுதான் உலகில் மொத்தப் பால் உற்பத்தியில் இரண்டாவது ஆகும். ஆனால் கால் நடையின் தனிப்பட்ட உற்பத்தி உலகிலேயே நம் நாட்டில்தான் மிகக்குறைவு. பிராணி ஒன்றுக்கு 8 அவுன்ஸ் பால் கிடைக் கிறது. இந்தநாட்டு உழவனின் வருமானத் தைப் பெருக்கக் கால்நடைகள் பயன்படுவ தில்லை.

(6) துணைத்தொழிலின்மை : வேலையின்மை : நம் நாடு ஒரு விவசாய நாடு. ஏறத்தாழ 80 % மக்கள் உழவுத் தொழிலையே நம்பி வாழ்கிறார் கள். 1951-ம்ஆண்டுக் கணக்குப்படி 28·5 கோடி மக்கள் 24·5 கோடி ஏக்கர் நிலத்தை நம்பிப் பிழைக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ஆறு மாதங்கள் வேலையின்றி ஓய்வாக இருக்கும் உழவனுக்குத் துணைத் தொழிலோ அல்லது வேறு தொழிலோ இல்லாத காரணத்தால் சோம்பேறியாக வாழவேண்டி இருக்கிறது. வாழ்க்கைத்தரமும் இப்பொழுது உயர்ந்துவிட்டது. வயலில் வரும் வருமானம் வாழ்க்கை நடத்தப் போதாமல் கடன் வாங் குகிறார்கள். இத்துடன் ஒரு ஆள் செய்யும் வேலைக்கு நாலைந்து ஆட்கள் இருப்பதால் வேலை செய்வோர் பொறுப்பினைத் தட்டிக் கழிப்பவர்களாகவே காட்சியளிக்கிறார்கள்.

(7) பயனனற்ற செலவுகள் : நம் நாட்டில் உழ வர்கள் வாங்கும் கடன் பெரும்பாலும் நிலத் தைப் பண்படுத்துவதிலோ அல்லது வேறு பல விஞ்ஞான முறைகளைக் கையாள்வதிலோ செலவழிக்கப்படுவதில்லை. இங்கு வாங்கப் படும் கடன் வழக்கு மன்றங்களிலும், திரு மணம், பண்டிகை முதலிய வழிகளிலும் விர யம் செய்யப்படுகிறது. உழவர் கடன்பற்றி அமைக்கப்பட்ட எல்லா ஆய்வுக்குழுவினரும் ஏனையோரும் ஒவ்வொரு அறிக்கையிலும் இதுபோன்ற பயனற்ற வழிகளில் பணம் பாழ் செய்யப்படுவதை எடுத்துக்காட்டி இருக்கின் றனர். நிலச் சீர்திருத்தம்பற்றி ஐ. நா. 1951-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த பயனற்ற செலவுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. உழவர் கடன் பற்றிய (W. R. S) சத்திய நாதன் அறிக்கையில் சென்னை மாகாணத்தில் 141 கிராமங்களில் எடுத்துள்ள கணக்கின்படி உழவன் செலவுப் பட்டியலின் விவரம் கீழ்க் காண்க.

| செலவின் வகை | தொகை மொத்தச் செலவில் |
|---|---|
| பூர்வீகக் கடன் அடைக்க | 25·1 % |
| உழவடைச் செலவு | 10·0 „ |
| நிலவளம் பெருக்க | 4·4 „ |
| வியாபாரம் | 12·9 „ |
| நிலவரி | 3·3 „ |
| நிலம் வாங்குதல் | 13·8 „ |
| குடும்பச் செலவு | 6·1 „ |
| பண்டிகை, திருமணம் | 10·5 „ |
| குழந்தைக் கல்வி | 1·4 „ |
| வீடுகட்டல் | 5·6 „ |
| இதரச் செலவுகள் | 6·9 „ |

மேற்கண்ட காரணங்களுடன் கொடுக்கல் வாங்கல் தொழில் நடத்துபவர்களும், ஆட் சியாளர்களின் நிலப்பாதுகாப்புக் கொள்கை யும் சேர்ந்து உழவர்களை மேன்மேலும் கடன் வாங்கும்படித் தூண்டி அவன் அழிவுக்குக் குழிதோண்டுவதாய் அமைகிறது. தலைமுறைக் கடனை ஒழிப்பதற்குத் தேவையான உழவர் கடன் நிவாரணச் சட்டம் போன்றவைகள் அவ்வப்போது இயற்றப்பட்டு வருகின்றன. எனினும் இதனால் சிலபல தொல்லைகள் வளர்ந்து வருகின்றனவேயன்றிக் கடன் ஒழிந்து நிம்மதியாக இருக்க வழி ஏற்படுவ தில்லை.

# செய்யப்படவேண்டியவைகள்

பருவமழையின்மையினால் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்க விஞ்ஞானத்தின் துணைகொண்டு செயற்கைமழை பெய்விக்க முயற்சிகள் செய்யப்படவேண்டும். பருவ மழைக்குக் காரணமான காடுகளை அழிக்காமல் பாதுகாத்துவரவேண்டும். வெள்ளத்தினால் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்கும்—தடுத்து அவற்றை விவசாய நலனுக்குப் பயன்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். ஏனைய நாடுகளைக்காட்டிலும் இயற்கைவளமும் மக்கள் தொகையும் அதிகமாயிருக்கும் நம் நாட்டில் விளைச்சல் மாத்திரம் மற்ற நாட்டைக் காட்டிலும் மிகமிகக் குறைவாக இருக்கிறது. இதற்கு முக்கிய காரணங்கள்; வயல் வளமிழந்து போதல், விவசாயத்தில் மிகவும் பிற்போக்கான பழைய முறையைக் கையாளுதல், கிராமத்தை நம்பி வாழும் அதிக மக்கள் தொகை, சமுதாயத்தின் அமைப்பு இவைகளும் இன்ன பிறவுமாகும். ஒரே வயலில் தொடர்ந்து பயிரிட்டுவந்தால் நாளடைவில் அதன் வளம் வற்றி விளைச்சல் குறைகிறது. வயலுக்கு நல்ல உரமிட்டும், மாற்றுப் பயிர் முறையைக் கையாளுவதின்மூலமும் வயல் இழந்த சத்தை ஈடுசெய்யலாம். நிலங்களைத் துண்டாடுவது பழக்கத்திலிருக்கும் பாகப்பிரிவினையினால் ஏற்படும் கேடு. ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் கீழுள்ள நிலத்தைத் துண்டாடக்கூடாது—என வரையறுத்தல் வேண்டும். கூட்டுறவு விவசாயத்தின் மூலமும் நிலத்தைச் சிறு துண்டுகளாக ஆக்காமல் காத்து வளத்தைப் பெருக்கலாம். அரசாங்கமே அந்தமாதிரி நிலங்களை எடுத்துக்கொண்டு உழவர்களுக்குக் குறுகியகாலக் கடன்—நீண்டகாலக் கடன் ஆகிய வசதிகள் மூலம் பங்கிட்டுக்கொடுக்கலாம் "தக்காவி" கடனுக்குப் பதிலாக உழவர்களுக்குத் தேவையான பொருள்களை வழங்கி உரம், விதை, முதலியவைகள் பெறுவதில் உள்ள காலதாமதமும் தவிர்க்கப்படவேண்டும். இவற்றுடன் உழவர்களுக்குத் துணைத்தொழில் மூலம் வருமானத்திற்கு வழிசெய்யவேண்டும். கிராமத்தை வெறுத்து நகரவாழ்வை விரும்பி நகரில் பெருகும் மக்களைக் கிராமத்தில் இருத்தி, உழவுத் தொழிலைக் கைக்கொள்ளச் செய்ய, நகரத்திலுள்ள மின்சாரவசதி, பொழுதுபோக்கு வசதி, உல்லாச ஓய்வுநேர விடுதிகள் பலவும் கிராமங்களில் கிடைக்கும்படிச் செய்தல் அவசியம். கால்நடையின் எண்ணிக்கை மற்ற நாட்டைக்காட்டிலும் அதிகமாக இருக்கிறதேயொழிய அதன் பயன் மற்ற நாட்டைக்காட்டிலும் மிகமிகக் குறைவு. கால்நடை உணவான சத்துள்ள புல் பயிரிடப்படுவது பெருகவேண்டும். கால் நடைகளுக்கு ஏற்படும் நோயைத் தவிர்த்து நல்ல முறையில் பாதுகாத்துவரவேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நம்நாட்டு உழவனின் எண்ணத்தில் எழுச்சி வேண்டும். பயனற்ற செலவுகளான பண்டிகைச் செலவுகளையும், கடன் வாங்கியும் கலியாணம் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்பனபோன்ற போக்கையும், "என் சொத்து முழுவதும் போனாலும்சரி அவனை ஒருகை பார்த்துவிடுகிறேன்" என்று மன்றமேறும் போக்கையும்; "என் பூர்வீகச் சொத்து இதில் ஒரு துண்டு நிலமிருந்தாலும் நால்வருக்கும் பங்குபோட்டுத்தான் ஆகவேண்டும்" என்று கூறிச் சிறு பகுதியையும் பல துண்டுகளாக்கும் பழமைப் போக்கையும், மழைக்காக வருணனுக்குக் காப்புக்கட்டிப் பொருளைப் பாழாக்கும் மடமைப் போக்கையும் மாற்றி, விஞ்ஞானத்தின் துணைகொண்டு, கூட்டுறவுமுறையில் பண்ணைகளை உருவாக்கி, வறுமையைப் போக்கி, வளம் காண முயலவேண்டும். இத்தகைய தோர் எழுச்சி உழவரிடை எழுந்தால்தான் ஆட்சியாளரின் மந்தநிலை மாறி நல்ல நிலை ஏற்பட வழி உண்டாகும். இன்றேல் 'உழவன் கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறக்கும்' நிலை நீடிக்குமே ஒழிய கடன்சுமை நீங்காது ; "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குதானும் மிஞ்சாது" என்ற பழமொழிக்குப் பொருள் இந்நாட்டில் என்றென்றும் இருந்துகொண்டேயிருக்கும் !



Regd. No. M 6296 MANR

தமிழ் நாட்டில் தலை சிறந்த

# வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்–ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

---

சலவைக்குச் சிறந்தது

**144**

பார் சோப்

தயாரிப்பாளர் :
நம் நாடு சோப் ஒர்க்ஸ்,
லால்குடி. (திருச்சி மாவட்டம்).

---

உடலுக்கேற்ற உடை
உழைப்புக்கேற்ற ஆடை
காலத்திற்கேற்ற அமைப்பு
கண்ணுக்கழகான தோற்றம்

இவைகளுடன்

உறுதியான தையலும்
உயர்தரமான தொழில் திறனும்

கொண்ட

ஆடைகளை விரும்புவோர்
வருகைக்குரிய

**தையல் தொழில் நிலையம்**

**கே. பி. சுந்தரம்.**
(அரசாங்கச் சான்றுபெற்றவர்)
148, புரசைவாக்கம் ஹைரோடு,
சென்னை-7.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS